விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? கட்டுரை உள்ளே...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (21.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

# புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு நிச்சயம் நடத்தப்படும்!

## ஆதரவு கிடைக்கும் என்கிறார் அமைச்சர் கிரியெல்ல



(கொழும்பு)

நாட்டில் புதிதாக உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பில் மக்களின் ஆதரவை வெளிக்கொணர்வதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நிச்சயம் நடத்தப்படும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பில் நேற்றையதினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்

23ஆம் பக்கம் பார்க்க....

## முக்கொலை வழக்கு; அடுத்த வாரம் தொடர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி முக்கொலை வழக்கின் தொடர் விசாரணையை அடுத்த வாரம் ஆரம்பிக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலிப்

24ஆம் பக்கம் பார்க்க....

## இருவர் மீது வாள்வெட்டு

(கரணவாய்)

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் வாள்வெட்டிற்கு இலக்கான இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வாகன விபத்து பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற குடும்பப் பெண் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.35 மணியளவில் மானிப்பாய் ஆனந்த வீதி வைரவர் கோயிலுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலில் போட்டியிடுவதற்கு சசிகலாவுக்கு வாழ்நாள் தடை!

(சென்னை)



சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைக்கு சென்றுள்ள சசிகலா தண்டனை காலம் முடிந்து வெளியே வந்தாலும் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை உருவாகி வருகின்றது.

தண்டனை பெற்ற குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என

24ஆம் பக்கம் பார்க்க....

## கர்ப்பிணிப் பெண் படுகொலை; டி.என்.ஏ பரிசோதனை இன்று

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரதும் மற்றும் அயல் வீட்டுக்காரரதும் இரத்த மாதிரியை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் குறித்த நபரது இரத்த மாதிரியை பெற்று அதனை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளிக்க யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் பணிப்புரை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் பிர

24ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து அரசின் பதில் என்ன?

### 25-வது நாளாக வவுனியாவில் போராட்டம்



23ஆம் பக்கம் பார்க்க....

## பிள்ளையானின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேச

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக மீனவர் மீதான சூடு; இலங். அரசு மீளவும் மறுப்பு

(கொழும்பு)



தமிழக மீனவர் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தவே இல்லை என்று இலங்கை அரசாங்கம் மீண்டும் ஆணித்தரமாக அறிவித்துள்ளது.

தமிழக மீனவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டதற்காக எல்லைமீறுகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு 120-வது இடம்

(ஜெனிவா)

ஐ.நாவினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மகிழ்ச்சி தினம் நேற்று கொண்டாடப்பட்டுள்ள நிலையில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், இலங்கை இந்த வருடம் 120ஆவது இடத்தை பிடித்துள்ளதுடன், இந்தியா 122ஆவது இடத்தை

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதிக்கப்பட்டோரின் விருப்பத்தை அறியாது கால அவகாசம் வழங்கும் முடிவு தவறானது

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கவலை

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற யுத்தம் சர்வதேச யுத்த நியமங்களுடன் நடைபெறவில்லை. அப்பாவி மக்களை கொல்லும் யுத்தமாகவே இறுதி யுத்தம் நடைபெற்றது. இதற்குதான் உலக நாடுகள் உதவி புரிந்தார்கள். மாறாக எங்கள் பாதுகாப்பை உணரவில்லை. இப்போதும் இலங்கை அரசை காப்பாற்றும் வகையில் காலவகாசத்தையும் வழங்க முடிவு செய்துள்ளார்கள். இது பாதிக்கபட்ட மக்களுடைய விருப்பத்தை கேட்காமல் ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்பட்ட முடிவு என வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குரல் அமைப்பின் வன்னிப் பிராந்திய இணைப்பாளர்கிருஷ்ணபிள்ளை தேவராஜா தெரிவித்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் நேற்றைய தினம் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
077 784 1558
(8364)

# விழிநீர் அஞ்சலி

அகம் மகிழ — உளம் குமுற

1962 07 05 — 2017 03 20



கிளிநெச்சி வன்னேரிக்குளத்தைப் பிறப்பிடமாகவும்
வவுனியா ஆச்சிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட
**ஐயாத்துரை முருகானந்தராசா**
அவர்கள்


20.03.2017 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை பொன்னாச்சி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற இராமையா வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், சுகிர்தா, (அமானா தக்காசல்), பிரகாஸ் ( டயலொக் நிறுவனம்), மிதுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலேஸ்வரி, மனோன்மணி, சண்முகராசா, இராஜேஸ்வரி,குகானந்தராசா, சிவானந்த ராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.03.2017 அன்று பி.ப 2.00 மணியளவில் சமனங்குளம் இந்து மயானத்தில் நடைபெறும்

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

தகவல்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 25 - 04 - 1944 — உதிர்வு 20 - 03 - 2017



அமரர்
## ஆறுமுகம் வேலாயுதம்

பண்ணாக மண்ணின் எமது ஆருயிர் தம்பி சிவமயம் மோதிலாலின் பாசமிகு மாமனார் அமரர் ஆறுமுகம் வேலாயுதம் அவர்களின் திடீர் மறைவு எம் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பண்ணாகம் விசவத்தனை வேலவனை வேண்டுகின்றோம்.



(C-7866)

கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கும்
திரு. ஜெபநேசன் சுதர்சினி (குடும்பம்)
திரு. ஜெயலிங்கம் சயிலகா (குடும்பம்)
திரு. குகதாசன் சோபனா (குடும்பம்)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி இராமசேது (மலர்)



பிறப்பு: 1942.08.16 இறப்பு: 2017.03.18

அல்வாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இராமசேது (மலர்) 18.03.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பருவதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இராமசேதுவின் (சிற்பக்கலைஞர்) அன்பு மனைவியும் இராசமணியின் மைத்துனியும் அழகம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னம்மா, நவரத்தினம், ஆனந்தம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ரதிவதனா (பிரான்ஸ்), உதயகுமார் (லண்டன்), வசந்தகுமார், ஜெயரதி (கனடா), ரஜினா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி (சுவிஸ்), சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), புனிதவதி (லண்டன்), துர்க்கா, சுரேஸ்குமார் (கனடா), ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிறோஜன், பிரசாந், சுமன், சுமித்திரா, வித்யா, அஸ்வினி, அனுஷ்கா, அஸ்விந், டிலோஜனா, தேனுஜன், ஜினோசன், தனுஜா, மதுசா, அபிரா, அஸ்வின், ஆகாஷ், கிருஜா, ரக்ஷன், அபிஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'உதயமஹால்'
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(8365)

தகவல்:
குடும்பத்தினர்
077 220 9615

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01/04/2017- 31/12/2017 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை. இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01/04/2017 –31/12/2017 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 31/03/2017 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தஙலமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 21/03/2017தொடக்கம் 31/03/2017 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 5000.00 | 536330.00 | 100.00 |
| 02 | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 43500.00 | 100.00 |
| 03 | நெல்லியடி கோழிக்கடை | 500.00 | 359250.00 | 100.00 |
| 04 | கோயிற்சந்தை கோழியிறைச்சிக் கடை | 1000.00 | 176250.00 | 100.00 |
| 05 | உடுப்பிட்டிச் சந்தை | 6000.00 | 616125.00 | - |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 2017/03/31ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT, NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

அ. வினோராஜ்
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
21/03/2017.


(சி-7862)

# சிறப்பு ஆயுதம் கொண்டு தாக்கப்பட்டு மூளை சிதறியதால் லசந்த உயிரிழந்தார்

## நீதிமன்றுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

**ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை துப்பாக்கிச் சூட்டில் அல்ல தலையில் சிறப்பு ஆயுதம் கொண்டு தாக்கப்பட்டு மூளை சிதறியதாலேயே இடம்பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.**



லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் தோண்டியெடுக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட பரிசோதனையின் போது இது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, அரசாங்கத்தின் உளவுப் பிரிவில் பணிபுரிந்த முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்திரவிதாரணவின் கீழ் செயற்பட்ட விசேட குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சி.ஐ.டி. யினர் தெரிவித்தனர்.

லசந்த விக்கிரமதுங்க மாத்திரமன்றி, ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகளையும், மேஜர் ஜெனரல் கபிலவின் தலைமையிலான குறித்த விசேட குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் அறிவித்தனர்.

அதேவேளை ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் அக்காலப்பகுதியில் கொழும்பிற்கு பொறுப்பாக கடமையாற்றிய இராணுவ மேஜர் ஜெனரலிடமும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சீன பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



மூன்று நாட்கள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாங் வான்குவான் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாங் வான்குவான் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நேற்றுக் காலை அவர், ஜனாதிபதியின் அதிகார பூர்வ வதிவிடத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

எனினும் இந்தப் பேச்சுக்களின் விபரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. பிரதமர் மற்றும் உயர் மட்ட தலைவர்களையும் பாதுகாப்பு அதிகாரிகளையும் சீன பாதுகாப்பு அமைச்சர் சந்திக்கவுள்ளார். (இ-7)

## ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது

### ஊடகத்துறை அமைச்சர் உறுதி

அரசாங்கம் என்ற ரீதியில் ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.



தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையம் மற்றும் இலங்கை பத்திரிகை நிறுவனங்கள் ஒருங்கிணைந்து 2006ம் ஆண்டு தயாரித்த தேசிய ஐக்கியத்திற்கான ஊடகப் பணி குறித்த "வெலிகம பிரகடனம்" தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வு அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு அமைச்சர் கயந்த கருணாதிலக்க மேலும் உரையாற்றுகையில்,

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, சுதந்திரம் என்பன உறுதி செய்யப்பட்டுள்ளன. அரசாங்கம் எந்த சந்தர்ப்பத்திலும் பலவந்தமாக எதனையும் மேற்கொள்ளவில்லை. தகவல் அறியும் உரிமை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுயாதீன ஊடக ஒழுக்கப்பாட்டு ஆணைக் குழுவுக்கான சட்டமூலம் 3 மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

நாட்டை சரியான வழியில் இட்டுச் செல்வதற்கான பொறுப்பு ஊடகங்களுக்கு இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## சுதந்திரக்கட்சி வலுவாக முன்னோக்கி நகர்கின்றது ஜனாதிபதி நம்பிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலுவாக முன்னோக்கி நகர்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் யார் என்ன சொன்னாலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் கட்சி வலுவாக முன்னோக்கி நகர்ந்துள்ளது. இளைஞர் அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தனிப்பட்ட நபர்களை முதன்மைப்படுத்தும் கொள்கைகளிலிருந்து விடுபட்டு கட்சியை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மேல் நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி களுஆராச்சி நேற்று அழைப்பாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன மற்றும் அப்போது எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கையொப்பங்களை போலியாக பயன்படுத்தி திஸ்ஸ அத்தநாயக போலி உடன்படிக்கையை தயாரித்ததாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்து கொள்ளவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில் முதலாம் மற்றும் இரண்டாம் சாட்சியாளர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இது தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த நிலையில், கடமைகள் காரணமாக முன்னிலையாக முடியவில்லை என அவர்கள் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

எனினும் இந்த வழக்கின் மேலும் ஒரு சாட்சியாளரான அமைச்சர் கபீர் ஹாசீம் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திக்கம் வடிசாலையை புனரமைக்க அமைச்சர் சுவாமிநாதனே தடை!

### மாகாண சபை உறுப்பினர் சிவயோகன் குற்றச்சாட்டு

திக்கம் வடிசாலையினைப் புனரமைப்புச் செய்வதற்கு தடையாக இருப்பது மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனே என வட மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் குற்றம் சாட்டியுள்ளார்.


உடுப்பிட்டி தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தம்பிப்பிள்ளை இராசரத்தினத்தின் 26ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தேவரையாளி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அமரர் இராசத்தினத்தினத்தின் முயற்சியாலேயே இத்திக்கம் வடிசாலை அமைக்கப்பட்டது. இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைந்தனர். ஆனால் தற்போது அது மூடப்பட்டிருக்கின்றது.

அங்கு கடமைபுரியும் ஊழியர்களிற்கு பல காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை. தற்போது அதனை இயக்குவதற்கான முயற்சிகள் நடைபெறும் வேளையில் அதற்கு தடையாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இருக்கிறார். அவர் தனது அமைச்சின் ஊடாகவே இப்புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என அரச அதிபரை பணித்திருக்கிறார். அவருக்கும் எங்களுக்கும் உள்ள சிறிய விரிசல் காரணமாக அவருடன் நாங்கள் கதைக்க முடியாத நிலை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3,60)

# இந்தியாவின் வெற்றிக் கனவைப் பறித்த ஷோன் மார்ஷ் - ஹேண்ட்ஸ்காம்ஸ் ஜோடி

## சமநிலையில் முடிந்த ராஞ்சி டெஸ்ட்



ராஞ்சியில் நடைபெற்ற இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 451 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 9 விக்கெட் இழப்பிற்கு 603 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. 152 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையுடன் 2-வது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 4-வது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 23 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ரென்ஷா 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.


நேற்று ஐந்தாவது நாள் ஆட்டம் தொடங்கியது. ரென்ஷாவுடன் ஸ்மித் களம் இறங்கினார். ரென்ஷா 15 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், ஸ்மித் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டம் இழந்தனர்.

அப்போது அவுஸ்திரேலியா 29.1 ஓவரில் 63 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஐந்தாவது விக்கெட்டுக்கு ஷோன் மார்ஷ் உடன் ஹேண்ட்ஸ்காம்ஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

புஜாரா - சகா ஜோடி எப்படி இந்தியாவை மீட்டதோ, அதேபோல் இந்த ஜோடி அவுஸ்திரேலியாவை தோல்வியில் இருந்து மீட்டது. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு விளையாடிய 2-வது செசனிலும், அதன்பின் நடைபெற்ற 3-வது செசனிலும் விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டனர்.

இதற்கிடையே ஒன்றிரண்டு ஓட்டங்களாக திரட்டி இருவரும் அரைச்சதம் அடித்தனர். இறுதியாக அவுஸ்திரேலியா 35 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றிருந்தபோது மார்ஷ் 53 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து மக்ஸ்வெல் களம் இறங்கினார். மக்ஸ்வெல் 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்ததால் சற்று பரபரப்பு ஏற்பட்டது.

7-வது விக்கெட்டுக்கு ஹேண்ட்ஸ்காம்ஸ் உடன் வேட் ஜோடி சேர்ந்தார். அவுஸ்திரேலியா 100 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 204 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது ஆட்டத்தை முடித்துக் கொள்ள இரு அணித் தலைவர்களும் ஒப்புக் கொண்ட



தால் ஆட்டம் சமநிலையில் முடிந்ததாக நடுவர்கள் அறிவித்தனர்.

ஹேண்ட்ஸ்காம்ஸ் 72 ஓட்டங்களுடனும், வேட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்திய அணி சார்பில் ஜடேஜா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகராக இந்தியாவின் புஜாரா தெரிவானார்.

ராஞ்சி டெஸ்ட் சமநிலையில் முடிந்துள்ளதால், தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. 4-வது மற்றும் கடைசி போட்டி எதிர்வரும் 25-ஆந் திகதி தரம்சாலாவில் நடக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி தொடரைக் கைப்பற்றும். இதனால் தரம்சாலா போட்டியில் இரு அணிகளும் வெற்றிக்காக போராடும் என்பதால் முதல் நாளில் இருந்தே போட்டி விறுவிறுப்பாக இருக்கும். (க)

### இப்போது கிண்டல் பண்ணுங்க பார்ப்போம்

# காயத்தை தட்டிக்கொடுத்து பதிலடிகொடுத்த ஹோலி



ராஞ்சியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தன் காயத்தை கிண்டல் செய்த அவுஸ்திரேலியா வீரர்களுக்கு, இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

இரு அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 451 ஓட்டங்களும், இந்தியா 9 விக்கெட் இழப்பிற்கு 603 ஓட்டங்களும் குவித்து டிக்ளேர் செய்தது.

இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 23 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் இப்போட்டியில் விராட் ஹோலி களத்தடுப்பில் ஈடுபட்ட போது எதிர்பாராதவிதமாக தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டு அதற்கான சிகிச்சை மேற்கொண்டார்.

அதை அவுஸ்திரேலிய வீரர்கள் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய போது கிண்டல் செய்தனர். அது தொடர்பான வீடியோவும் சமூகவலைத் தளங்களில் வைரலாக பரவின.

தற்போது அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் வோர்னர் ஜடேஜா பந்து வீச்சில் போல்டான போது, விராட் ஹோலி தன் காயத்தை தட்டிக் கொடுத்து இப்போது கிண்டல் செய்யுங்கள் பார்ப்போம் என்றபடி தன் தோள்பட்டை காயத்தை தட்டிக் கொடுத்தார்.

இதற்கு சமூக வலைத்தளங்களில் பலரும் தகுந்த பதிலடி என்று குறிப்பிட்டு வருகின்றனர்.



## சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கவேண்டும்



கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என பாகிஸ்தான் அணி முன்னாள் வீரர் ஜாவித் மியாந்தத் கூறியுள்ளார்.

உலக கிரிக்கெட் அரங்கில் பல முன்னணி வீரர்கள் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

சமீபத்தில் கூட பாகிஸ்தான் சுப்பர் லீக் கிரிக்கெட் போட்டியில் முகமது இர்பான், ஷார்ஜில், காலித் போன்ற வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

அவர்கள் மீது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில் இது குறித்து பேட்டியளித்த பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ஜாவித் மியாந்தத், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தொடர்ந்து சூதாட்ட பிரச்சினைகளில் சிக்குவது வருத்தம் அளிக்கிறது

இதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் எடுக்க வேண்டும்

சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

## இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியவரை கொன்றது அமெரிக்க விமானம்



ஆப்கானிஸ்தானில், அமெரிக்க ஆளில்லா விமானங்கள் மேற்கொண்ட வான்வழித்தாக்குதல் மூலம், இலங்கை கிரிக்கெட் அணியை தாக்கியதாக சந்தேகிக்கப்பட்டு, தேடப்பட்டுவந்த குவரி யாசீன் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குவரி யாசீன், கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூர் நகரில் இடம்பெற்ற, இலங்கை கிரிக்கெட் அணியினர் மீதான தாக்குதலில் தொடர்புபட்டவராக பாகிஸ்தான் அறிவித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் ஆளில்லா விமானம், பாகிஸ்தானின் பக்டிக்கா மாகாணத்தில் நடத்திய வான்வழி தாக்குதலில், குவரி யாசீன் மற்றும் அவருடன் இணைந்து பயணித்த மூன்று பேரும் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 6 ஆவது நாளாக கவனயீர்ப்புப் போராட்டம்





யாழ். வடமராட்சிக் கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுக்கும் காலவரையறையின்றிய கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 6 ஆவது நாளாகவும் வடமராட்சிக்கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக தொடர்ந்தது. (இ-60-64-89)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 1932 06 05



இறப்பு 2017 02 22

**அமரர் முருகுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை**

வரணி இடைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் முருகுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 22.03.2017 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிரியைகள் 24.03.2017 வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அமரர் அமரத்துவம் அடைந்த நேரம் உடன் நின்று உதவி புரிந்தவர்களுக்கும் மலர் வளையம் சாத்தி கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் எல்லா வகையிலும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்-

(7943)

இடைக்குறிச்சி, வரணி. குடும்பத்தினர்.



## வெளிவந்துள்ளது!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு **புதியதோர் வரவு**

**விவேக கணித வழிகாட்டி**

**பகுதி I, பகுதி IIல் மொத்தமாக 130 புள்ளிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள 2624 கணித வினாக்கள் விடைகளோடு அடங்கிய பரீட்சை வழிகாட்டி**




600/=

தொகுப்பு :
S. உசேந்திரன் (B.com, National Dip in Teach.)
Mrs. வசந்தி உசேந்திரன் (National Dip in Teach.)

கிடைக்கும் இடம் : **அன்னை புத்தகசாலை**
இல.7, நவீன சந்தை வெளிப்புறம்,
யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2229881

(C - 7851)


## லண்டனில் தமிழர் மீது தாக்குதல் முயற்சி

லண்டனில் இனத்துவேசத்திற்கு எதிரான பேரணியொன்று ஆகுதிகளின் உரிமைகளுக்கான அமைப்பினதும், தமிழ் சொலிடாரிட்டி அமைப்பினதும் இணை ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பேரணி நேற்று முன்தினம் பறை இசையுடன் ஆகுதிகளுக்கான அடிப்படை உரிமைகளையும், இனத்துவேசத்துக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பியவாறு தமிழர்கள் குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் இந்த பேரணியின் போது இலங்கை சிங்கக்கொடியையும், விமல் வீரவன்சவின் படத்தையும் தாங்கி வந்த மற்றுமொரு குழுவினருக்கும், இனத்துவேசத்திற்கு எதிரான போராட்டத்தினை மேற்கொண்ட குழுவினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, இரு குழுவினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. (இ-7)


## தெய்வத்தின் திருப்பாதத்தில்!

அனுமதி இலவசம்!

# ஆசீர்வாத பெருவிழா!

**இயேசு ஜீவிக்கிறார்** பணியின் 39 ஆவது சுவிசேஷ மாநாடு!

அன்புடையீர்!

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம் தோஷங்களிலிருந்தும் விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் கட்டுகள், செய்வினை, மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள், இன்றே இரட்சண்ணியத்தின் நாள், இன்றே அனுக்கிரகத்தின் நாள், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2017 மார்ச் 24,25,26 மாலை 5.00 மணி

**தெய்வீக சுகத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!**

**இடம்:- மாநகரசபை மைதானம், வவுனியா**

செய்தி:- கலாநிதி M.R. இராஜேந்திரம் மற்றும் C.V. இராஜேந்திரம்

(8339)

**39 வது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு**

மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 முதல் 3.00 மணிவரை.

இடம்:- இல. 18, டேங்க் ஒழுங்கை, இரம்பைக்குளம், வவுனியா.

மேலதிக தொடர்புகளுக்கு:- இயேசு ஜீவிக்கிறார் ஆலயம் 401, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15, தொ.இ. 011 252 2608



## விற்பனைக்கு / குத்தகைக்கு

2-ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக) $2^1/_2$ பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**
**0774215879** (C - 7861)


# இராசி பலன்

21.03.2017
(பங்குனி 08, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
அட்டமி முற்பகல் 8.56 மணிவரை
மூலம் முற்பகல் 10.17 மணிவரை
சுபநேரம் 10.47-12.17 மணிவரை
இராகுகாலம் 3.17-4.47 மணிவரை
அட்டமி-நவமி

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி, மிருகசீரிடம் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, பயணத்தின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள்.

**துலாம்:** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, தொழில் வளர்ச்சியுண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** பக்குவமாய் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், அதிக அலைச்சல்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் கூடும், தொழில் நன்மையுண்டு.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வழியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பணவரவால் சந்தோசமடைவீர்கள்.

**மீனம்:** வாக்குறுதியை காப்பாற்றி மகிழும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

வளவன்





உடுப்பிட்டி தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் த.இராசலிங்கத்தின் 26ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது. வடமாகாண சபை உறுப்பினர் வி.சிவயோகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்து கொண்டு அமரர் இராசலிங்கத்தின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான கே.தர்மலிங்கம், எஸ்.பரம்சோதி, தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம்,யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் கணக்காளர் ந.இராஜேந்திரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (படங்கள்:-மகாலிங்கம்)

# தகுதியான வேட்பாளர்களைத் தெரிவு செய்யக்கோரி மார்ச் 12 மக்கள் இயக்கம் விழிப்புணர்வு கருத்தரங்கு




(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெறும் தேர்தல்களின் போது தகுதியான வேட்பாளர்களை நிறுத்துமாறு அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் தகுதியான வேட்பாளர்களை தெரிவு செய்யும் முகமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் மார்ச் 12 மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் இராமநாதன் வீதி கலட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் கவுஸ்) நடைபெற்றது.

மார்ச் 12 பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் தேர்தல்களில் பொருத்தமான வேட்பாளர்களை களமிறக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்காக சட்டம் மற்றும் கொள்கையாக்க செயற்பாடு பற்றிய அறிவு- புரிதல் மற்றும் ஆளுமையுடன் கூடிய பொருத்தமான வேட்பாளரை தெரிவு செயவது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதை நோக்கமாக கொண்டு இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

தூய்மையான அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்க பவ்ரல் - கரித்தாஸ் சர்வோதயம் போன்ற மனிதநேய அமைப்புக்கள் ஒன்றிணைந்து மேற்படி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதில் சமயத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொலிஸார், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை




மாவிட்டபுரம் அரசடிச் சந்தியிலிருந்து மாவிட்டபுரம் அமெரிக்கா மிஷன் அ.த.க. பாடசாலை ஊடாக கிராம சேவையாளர் அலுவலகம் வரை செல்லும் 2 கிலோமீற்றர் நீளமுள்ள வீதி புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது.

2012ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் இதுவரை இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. இவ்வீதியை சுமார் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றன. இவ்வீதியின் ஊடாக கிளை வீதியாகச் சென்று கே.கே.எஸ். வீதியைச் சென்றடையும் 600மீற்றர் நீளம் உள்ள வெள்ளவாய்க்கால் வீதியும் புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3,23)

# செயற்பட்டு மகிழ்வோம் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் கோட்டங்களுக்கிடையிலான கோட்ட மட்ட செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டுப் போட்டி கடந்த 15.03.2017 புதன்கிழமை யாழ்ப்பாணம் கல்வி வலய ஆரம்பக்கல்வி விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. மூன்று கோட்டங்களையும் உள்ளடக்கிய அனைத்து பாடசாலைகளிலுமிருந்து மாணவர்கள் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி செயற்பட்டனர். இந்நிகழ்வில் கோட்ட ரீதியாக வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிக்கு தகுதி பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

கோப்பாய் கோட்டம்

பிரிவு 5:-முதலாமிடம்-கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், இரண்டாமிடம்-அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை , மூன்றாமிடம்-கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம்.

பிரிவு 4:- முதலாமிடம்-கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,இரண்டாம் இடம்- இடைக்காடு மகா வித்தியாலயம், மூன்றாமிடம்-அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

நல்லூர் கோட்டம்

பிரிவு 5:-முதலாமிடம்- கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், இரண்டாமிடம்- யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, மூன்றாமிடம்-உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.

பிரிவு:-4 முதலாமிடம்- யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலை, இரண்டாமிடம்-நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், மூன்றாமிடம்-திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

யாழ். கோட்டம்

பிரிவு 5:- முதலாமிடம்-நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், இரண்டாமிடம்-யாழ்ப்பாணம் சென். மேரிஸ் வித்தியாலயம், மூன்றாமிடம்-யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

பிரிவு 4:- முதலாமிடம்-ஒஸ்மானியாக்கல்லூரி, இரண்டாமிடம்- சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், மூன்றாமிடம்-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

பிரிவு 3:- முதலாமிடம்-யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா 25ஆம் திகதி சனிக்கிழமை சுறோம்படி வைரவர் ஆலய முன்றலில் பிற்பகல் 2 மணியளவில் சனசமூக நிலையத் தலைவர் க. திருவரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், விருந்தினர்களாக ஆசிரியரான ப.சுரேந்திரன் மற்றும் பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் பொருளாளர் இ.தனவேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (இ-12)

# ஆட்லெறியின் முகப்புப்பகுதி மீட்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இருந்து பழைய ஆட்லெறி ஒன்றின் முகப்புப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் 19ஆம் திகதி காலையில் அப்பகுதியில் வெடிபொருள் இருப்பதாக மருதங்கேணியில் உள்ள இராணுவத்தினரால் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வங்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர். நாகர் கோவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியிலேயே இவ்வெடிபொருள் காணப்பட்டது. இப்பகுதி யுத்தம் இடம்பெற்ற பகுதி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3,60)

# வர்த்தக நிலையத்தில் தொலைபேசிகள் திருட்டு

## முறைப்பாட்டை பொலிஸார் ஏற்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கைத்தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் இடம்பெற்றது.

நீதிமன்றத்திற்குள் கைத் தொலைபேசிகள் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் நீதிமன்றுக்கு வரும் சிலர் வர்த்தக நிலையத்தில் தொலைபேசியைக் கொடுத்து விட்டு செல்வது வழமை. அவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை அவ் வர்த்தக நிலையத்தில் கொடுக்கப்பட்ட பெறுமதியான இரண்டு கைத்தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடச் சென்றபோது பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

07

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய கட்சிகளின் கூட்டுத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆயிற்று.

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு மாதிரியாகக் கூட்டமைப்பிலிருந்து விலகச் செய்தனர்.


அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தனது கொள்கைக்கு முரணாக கூட்டமைப்பின் தலைமை நடந்து கொண்டதால் தானாக வெளியேறியது.

எனினும் கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னதாக கூட்டமைப்பின் கொள்கை என்பது அதிகம் பிசகாமல் இருந்ததென்பதே உண்மை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற ஆசனத்தைப் பெறமுடியாமல் போன போதுதான் கூட்டமைப்பு ஒரு சிலரின் அதிகாரத்திற்குள் மாட்டுப்பட்டது எனலாம்.

கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் எடுத்துக்கொண்ட விடயத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்.

கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கூட்டமைப்பின் சுளிவு நெளிவுகளை எல்லாம் சீர்ப்படுத்திய பெருமையும் சுரேஷ் பிரேமச்சந்திரனையே சாரும்.



பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு ஆணித்தரமாகவும் தெளிவாகவும் பதில் அளிக்கக்கூடிய சுரேஷ் பிரேமச்சந்திரன் யார் எந்தப் பக்கம் நகர்கின்றனர் என்பதை அறிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் தனது கருத்தை அடித்துக் கூறும் வல்லமை கொண்டவர். இருந்தும் அவர் பாராளுமன்ற ஆசனத்தை இழந்ததால் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற அந்தஸ்தையும் இழக்கவேண்டிய தாயிற்று. இதன்பின்னர் தான் கூட்டமைப்பு, இரா.சம்பந்தர், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இதுவே உண்மை.

சுரேஷ் பிரேமச்சந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றிருப்பாராயின் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்குதல் என்ற கூட்டமைப்பின் முடிவுக்கு அவர் ஒரு போதும் இடம் கொடுத்திருக்க மாட்டார் என்பது சர்வ நிச்சயம்.

ஆக,ஈழத்தமிழர்களுக்கு துரதிர்ஷ்டம் என்பது நேற்று இன்று அல்ல பலகாலமாகத் துரத்திவருகின்ற பெருந்துயர்தான் அது.

அன்னை இந்திராகாந்தியின் மறைவு, தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரின் இழப்பு, அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மறைவு என எல்லாமும் எங்களுக்கு துரதிர்ஷ்டமாகவே அமைந்து வருகிறது.

இது ஒரு புறம் இருக்க, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றிகூட தமிழர்களுக்குப் பாதகமானது என்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் விவகாரம் மற்றும் வன்னிப் பெரு நிலப் பரப்பில் நடந்த யுத்தக் கொடூரம் என அனைத்தையும் அறிந்து வைத்திருந்த ஹிலாரி அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் அது எங்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கும்.

கெடுகாலம் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றார் என்ற களிப்பில் ஜனாதிபதி மைத்திரி உடனடியாகத் தனது வாழ்த்தைத் தெரிவித்தார் என்பதும் அமெரிக்காவின் உதவியுடன் ஐ.நா. தீர்மானங்களை வெட்டி எறிய முயற்சிகள் நடப்பதும் தெரிந்ததே.

ஆக, நடக்கின்ற அத்தனை சம்பவங்களும் தமிழ் மக்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.



ஒட்டு மொத்தத்தில் சம்பந்தரை அதட்டிப் பேசக்கூடியவரும் அவர் வயதை ஒத்தவருமான ஆனந்தசங்கரி அவர்களைப் புலிகளுடன் பகைக்கச் செய்து அவரை ஓரங்கட்டியமை, ஆங்கிலத்திலும் சட்டத்திலும் நிபுணத்துவம் உடைய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியமை, கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு பாராளுமன்ற ஆசனம் கிடைக்காமல் செய்தமை என்று சூழ்ச்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலங்கை அரசின் ஆதரவுக்கட்சியாக ஆக்கிக் கொண்டது.

இதை நாம் காணும்போது கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய தமிழரசுக் கட்சி தவிர்ந்த ரெலோ, புளொட் ஆகியவற்றின் நிலைப் பாடு என்ன என்ற கேள்வி உங்களிடம் எழவே செய்யும்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களின் கைகளுக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக இரண்டு வியூகங்களை கூட்டமைப்பின் தற்போதைய தலைமை அமைத்துக் கொண்டது.

அதில் ஒன்றுதான் ஏலவே நாம் குறிப்பிட்டவர்களை வெளியேற்றியமை.

இரண்டாவது வியூகம் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை தமது கைக்குள் வைத்திருப்பது. செல்வம் அடைக்கலநாதனைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் உரிமை, தமிழ் மக்களின் வாழ்வு என்பதெல்லாம் அவருக்கு இரண்டாம் படியே. முதலாவது தேவை எம்.பிப் பதவியாகவே இருந்தது.

பதவிக்கு முன்னுரிமை என்பதும் மன்னாரில் தனது பலத்தை நிலை நிறுத்துவதுமே தனது இரு கண்களென கொண்டிருந்த செல்வம் அடைக்கலநாதனின் சுய வடிவம் கூட்டமைப்பின் தலைமைக்கு நன்கு தெரிந்திருந்தது.

இதனால் செல்வம் அடைக்கலநாதனுக்கு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் என்ற பதவியை வழங்க அவர் கூட்டமைப்பின் தலைமையிடம் பூரண சரணாகதியடைந்தார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# இனப்படுகொலையிலிருந்தும் மனித பேரவலத்தையும் சந்தித்து மீண்டெழுந்த இனம் நம்பிக்கையை ஒருபோதும் கைவிடக்கூடாது

## ரொறன்ரோ மேயர் ஜோன் ரொரி தெரிவிப்பு




(பனிக்கன்குளம்)

பாரிய இனப்படுகொலையிலிருந்தும் மனிதப்பேரவலத்திலிருந்தும் மீண்டு வந்த தமிழினம் ஒருபோதும் நம்பிக்கை என்ற ஒன்றை மட்டும் கைவிடக்கூடாது. இவ்வாறு கனடாவின் ரொறன்ரோ மேயர் ஜோன் ரொரி தெரிவித்தார்.

விசேட பயணமாக நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவுக்கு வருகை தந்த அவர்,

முல்லைத்தீவு முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இச்சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், போரில் அவயவங்களை இழந்தவர்கள்மற்றும்முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடி சமாசத் தலைவர், அரசியல் கைதிகளின் உறவுகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மாணவர்கள் ஆகியோர் தாம் எதிர்கொள்ளும் துன்பங்கள் குறித்து கனடா ரொறன்ரோ மேயரிடம் எடுத்துரைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மேயர் ஜோன் ரொரி,

புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர்கள் கடுமையாக உழைக்கின்றார்கள். அத்தோடு தமது பிள்ளைகளையும் மிகவும் திறமையானவர்களாகவும்வளர்க்கின்றார்கள். அத்தோடு தமது உழைப்பில் தமது தாயகத்தில் வாழும் உறவுகளான பாதிக்கப்பட்டவர்களுக்கும் முடிந்த உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

அவர்களின் ஒத்தாசை எப்போதும் உங்களுக்கு இருக்கும் என்பதை நான் அறிவேன். நீங்கள் மிகவும் நோகடிக்கப்பட்டுள்ளீர்கள், சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்துள்ளீர்கள் என்பதனை பலர் சொல்ல கேட்டிருக்கின்றேன். அவற்றை இன்று நேரில் வந்து பார்க்கும்போது உணர்ந்து கொள்கின்றேன்.

எப்போதும்நம்பிக்கையை கைவிடாதீர்கள். பாதிப்புக்களிலிருந்து மீண்டெழுந்தவர்கள் நீங்கள் என்றும் நம்பிக்கை என்ற ஒன்றை மட்டும் இழக்கக்கூடாது ,உங்களின் வாழ்வில் வசந்தம் வீசும் என்றும் உங்களுக்கு எமது ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அவருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், கனடா- ரொறன்ரோ மாநகர சபை பிரதிநிதி மைக்கல் தொம்சன், கனடா- ரொறன்ரோ மாநகர சபையின் தமிழ் பிரதிநிதி ஈழத்தமிழரான நீதன் சான் மற்றும்மேயர் அலுவலகத்தின் சிரேஷ்ட தொடர்பாடல் ஆலோசகர் கீர்த்தனா கமலவர்சன், வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும்வடக்குமாகாண சபை உறுப்பினர்கள் து. ரவிகரன் மற்றும் சிவநேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

வன்னி வலம்

## ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத்திட்டம்

### வவுனியாவில் ஆரம்பம்

அரச அலுவலர்களை அறிவுறுத்தும் வேலைத் திட்டமாகிய "நில மெகவர" ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத்திட்டம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அலுவலர்களிடம் மக்கள் செல்வதற்கு பதிலாக அதிகாரிகள் மக்களிடம் வந்து பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைவாக நில மெகவர ஜனாதிபதி மக்கள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொது மக்கள் அடையாள அட்டை, பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்கள், சாரதி அனுமதிப்பத்திரம், ஒய்வூதிய திணைக்கள சேவைகள், வீட்டுக் கடன் பெற்றுக் கொள்ளல், முதியோர் அட்டைகள் பெற்றுக்கொள்ளல், காணி உரிமம், வேலைவாய்ப்பு, சமுர்த்தி ஒய்வூதிய கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன கலந்துகொண்டு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச்சேர்ந்த அரச அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே. மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி.றோகண புஸ்பகுமார மற்றும் அரச அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## மாணவனைக் காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜோன்சன் (வயது 13) என்ற மாணவனைக் காணவில்லை என தந்தை புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கடந்த 15 ஆம் திகதி காலை கடைக்குச்சென்று வருவதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியே சென்ற பிரஸ்தாப மாணவன் மாலை வரை வீடு திரும்பாத நிலையில் மறுநாள் காலை தந்தை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடொன்றை பதிவு செய்தார்.


பிரஸ்தாப மாணவனின் தாயார் வன்னி இறுதி யுத்தத்தில் இறந்து விட்டதாகவும் தந்தை மாற்றுத்திறனாளி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காணாமல் போனதாக கூறப்படும் மாணவன் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடமும் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-310)

## பூங்காவிலுள்ள விளையாட்டு உபகரணங்கள் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன

### கட்டணம் அறவிடும் பிரதேச சபையினர் கவனத்தில் எடுப்பார்களா?





முல்லைத்தீவு நகருக்கு அண்டிய மக்களின் சுற்றுலா தளமாக இருக்கும் கடற்கரை பகுதியில் அமைந்திருக்கும் சிறுவர் பூங்காவில் உள்ள பெரும்பாலான விளையாட்டு உபகரணங்கள் சிறுவர்கள் பாவிக்கமுடியாத அளவு சேதமடைந்து காணப்படுகின்றது. அவற்றை உடனடியாக திருத்தி சிறுவர்களின் மகிழ்வான தருணங்களுக்கு உதவ வேண்டுமென கரைதுறைப்பற்று பிரதேச சபையினரும் ஏனைய உரிய அதிகாரிகளும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்

குறித்த பூங்காவில் காணப்படும் பெரும்பாலான உபகரணங்கள் பாவிக்க முடியாமல் காணப்படுவதுடன் சிறுவர்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடியனவாகவும் காணப்படுகின்றது.

உள்நுழைவுக்கான கட்டணங்களை அறவிடும் பிரதேச சபையினர் இவற்றை கவனத்திலெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

## மகளிர் தின நினைவுகூரல் நிகழ்வு

(கிளிநொச்சி)

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் (Search for Common Ground) நிறுவனத்துடன் ஒன்றிணைந்து மகளிர் தின நினைவுகூரல் நிகழ்ச்சி- 2017 நாளை புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமர், பாராளுமன்ற அமைச்சர்கள், பிரமுகர்கள் உள்ளிட்ட விசேட விருந்தினர் கள் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஆதரவாக வவுனியாவில் இளைஞர்கள் கவனயீர்ப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஆதரவு தெரிவித்து இளைஞர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் கடந்த 24ஆவது நாளாக தமது போராட்டத்தை மேற்கொண்டு வரும் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று முன்தினம் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் வவுனியா மாவட்ட இளைஞர்கள் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தெருவில் இருக்கும் தாய்மாரின் கண்ணீருக்கு பதில் என்ன? , அரசே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் கூறு, அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய் என பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (2-250)

# ஓமந்தையில் கட்டுத்துப்பாக்கி மீட்பு பொலிஸ் விசாரணை தீவிரம்

(மல்லாவி )

ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள புதிய சின்னக்குளம் காட்டுப் பகுதியில் மிருகங்களை வேட்டையாடும் நோக்குடன் பொறி விசையில் உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியொன்றை ஓமந்தை பொலிஸார் மீட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.


புதிய சின்னக்குளம் காட்டுப்பகுதியில் தனது கால் நடைகளை தேடிச் சென்ற நபர் ஒருவர் கட்டுத் துப்பாக்கி வைக்கப்பட்டுள்ளதை அவதானித்து விட்டு ஓமந்தைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மிக நுட்பமான வகையில் பொறிவிசை செய்யப்பட்டு உருமறைக்கப்பட நிலையில் இருந்த துப்பாக்கியை மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக புலன் விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-15-250)




# களஞ்சியசாலை உடைக்கப்பட்டு பணம், காசோலைகள் திருட்டு

## வவுனியாவில் சம்பவம்





(குருமன்காடு)

வவுனியா குட்செட் வீதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான களஞ்சியசாலை உடைக்கப்பட்டு பெறுமதியான பணம், காசோலைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவுநடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை கடமைகளை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் பின்னர் இரவு 8.30 மணியளவில் குறித்த களஞ்சியசாலையை மூடிவிட்டுச் சென்றுள்ளனர்.

பணியாளர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் களஞ்சியசாலையில் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை.

இந் நிலையில் நேற்று காலை 7.30 மணியளவில் அலுவலக நடவடிக்கைக்காக களஞ்சியசாலையை திறப்பதற்கு சென்ற ஊழியர் களஞ்சியசாலை உடைக் கப்பட்டு திருட்டு போயுள்ளது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து களஞ்சியசாலை உரிமையாளருடாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த களஞ்சியசாலையிலிருந்து வட்டவல தேயிலை, பால் பைக்கற் போன்றவற்றை வியாபார நிலையங்களுக்கு விநியோகம் செய்து வரும் களஞ்சியசாலை நேற்று முன்தினம் இரவே உடைக்கப்பட்டுள்ளதாகவும், களஞ்சியசாலையிலிருந்து 43 ஆயிரம் முதல் 45ஆ யிரம் ரூபா வரையான பணம், காசோலை இருந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# வவுனியாவில் சைற்றம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு







வவுனியாவில் சைற்றம் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கருத்தரங்கு ஓமந்தை ஆரம்ப வைத்திய சாலையின் சிரேஷ்ட வைத்தியதிகாரி செ.மதுரகனின் நெறியாள்கையின் கீழ் நேற்று முன்தினம் காலை வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் வைத்திய அதிகாரி சி.துசாரகன், வவுனியா சிரேஷ்ட வைத்திய அதிகாரி சுதாகரன், முன்னாள் மருத்துவ பீட மாணவத்தலைவர் போல் பிரைட் பெனடிக், பல்கலைக் கழக மாணவர்கள், பொது மக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# கிளியில் அரச உத்தியோகத்தர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட விடுதி திறந்துவைப்பு






(பரந்தன்)

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியுதவியில் கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான குடும்ப விடுதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவினால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைக்கப்பட்ட விடுதி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதுடன் ஆறு அரச உத்தியோகத்தர்கள் அவர்களது குடும்பத்தினருடன் வசிப்பதற்கு உத்தியோகபூர்வமாக அன்றைய தினம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன,பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பல அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# வவுனியாவில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



(குருமன்காடு )

வவுனியாவில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

குறித்த நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலம் ஒரு கிலோ 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டதுடன், கிளிநொச்சியில் இருந்து மொனராகலவுக்கு செல்வதற்காக வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு வருகை தந்த நபரிடமே மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபரை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# இனந்தெரியாத நபர்களால் மோ.சைக்கிளுக்கு தீ மூட்டல்

## விளக்குவைத்தகுளம் பகுதியில் சம்பவம்



வவுனியா, ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரியூட்டப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் வளாகத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டு உரிமையாளர்கள் வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த போது வீட்டு வளவுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளை தீ வைத்து எரியூட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் பெற்றோல்ராங் வெடித்து எரிந்த சத்தம் கேட்டு எழுந்த வீட்டுக்காரர் மற்றும் அயல் வீட்டார் தீயை கட்டுப்படுத்த முயன்ற போதும் அது வெற்றியளிக்கவில்லை.

இது தொடர்பில் ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற் கொண்டனர். (2-15-250)

# காணாமற்போனோரின் உறவுகளின் போராட்டம் கிளியில் தொடர்கின்றது




(பரந்தன்)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் நேற்று 29 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று திங்கட் கிழமை 29 ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும்வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு தொடர்கிறது.

இரவு பகலாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.(2-15-312)

# தென்னைகளுக்கிடையிலான ஊடுபயிர்ச்செய்கையின் முக்கியத்துவம்






தனியாக தென்னை உள்ள ஒரு காணியில் அத் தென்னை மரத்தினால் 22வீதமான இடப்பரப்புத்தான் உபயோகிக்கப்படுகிறது. மிகுதியாக உள்ள 78வீதமான இடப்பரப்பு வீணாகவே காணப்படுகிறது. அதாவது தென்னையின் வேர்த்தொகுதியானது ஒவ்வொரு வருடமும் 1 அடி - 1.5 அடி சுற்றுவட்டத்தால் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இவ்வாறு அதிகரிக்கும் வேர்த்தொகுதியில் 80 வீதமானவை தென்னை காய்க்கும் நிலையிலிருந்து அது ஓயும்வரை 6 அடி சுற்றுவட்டத்திற்குள்ளேயே காணப்படும்.


ஊடுபயிர்ச் செய்கையைத் திட்டமிடுகையில் அப்பிரதேசத்தின் மண்ணமைப்பு . நீரின் தன்மை, பசளைவட்டத்தின் அமைவிடம், காட்டு விலங்குகளின் நடமாட்டம் போன்ற விடயங்களை கருத்திலெடுத்துச் செயற்படுத்தப்பட வேண்டும்.

தென்னைகளுக்கிடையில் வருடாந்த தாவரங்களையோ (வாழை, பப்பாசி) அல்லது பருவகாலத் தாவரங்களையோ (மரக்கறி, தானியம்) பயிரிடுவதை ஊடுபயிர்ச் செய்கை எனக்குறிப்பிடுவர்.

எனினும் பல்லாண்டுத் தாவரங்களை (பசன்புருட், தேசி) பயிரிடுவதை கலப்புப் பயிர்ச்செய்கை என்பர். ஊடுபயிர்களையும் கலப்புப் பயிர்களையும் தென்னந் தோட்டத்தில் செய்தல் பல்மட்ட தாவரக் கட்டமைப்பு எனப்படும். இவ்விடங்களில் கால் நடைகளையோ அல்லது கோழிகளையோ வளர்த்தலை கலப்புப் பண்ணை முறை என்பர்.

ஊடுபயிர்ச் செய்கையையோ அல்லது கலப்புப் பயிர்ச் செய்கையையோ 5 வயதிற்குட்பட்டதும் 20 வயதிற்கு மேற்பட்டதுமான தென்னைகளுக்கிடையே சிறப்பாகச் செய்யலாம்.




0 - 5 வயதிற்குட்பட்ட தென்னைகளுக்கிடையே பசன், பப்பாசி, வாழை, மரக்கறி

6 - 20 வயதிற்குட்பட்ட தென்னைகளுக்கிடையே புற்கள், கிழங்கு வகை, இஞ்சி

21 - 50 வயதிற்குட்பட்ட தென்னைகளுக்கிடையே வாழை, பப்பாசி, அன்னாசி

தென்னைக்கான இடப்பொருத்தப்பாட்டு வரைபடமானது இன்னமும் வடபகுதிக்குச் செய்யப்படவில்லை.


| இடம் | பொருத்தப்பாட்டின் தன்மை | பிரதேசம் | சராசரி விளைச்சல் (காய்கள்/ac/வருடம்) |
|---|---|---|---|
| S1 | மிகச்சிறந்தது | கடற்கரையை அண்மித்த இடம், இருவாட்டி மண் | 6000 |
| S2 | சிறந்தது | கடற்கரையை அண்மித்த இடம், இருவாட்டி மண், களிமண், ஆழம்கூடிய மண்படை, சேதனப்பசளை குறைவு | 5000 - 6000 |
| S3 | பொருத்தமானது | ஓரளவு ஆழமான மண்படை, இருவாட்டி மண், மண்ணீரின் அளவு குறைவு, சேதனப்பசளை குறைவு | 4000 - 5000 |
| S4 | இடைப்பொருத்தம் | நீர்வடியக்கூடியது, களி, கிரவல் தன்மையுடைய இருவாட்டி மண், மண்ணீரினளவு குறைவு | 2000 - 4000 |
| S5 | ஓரளவு பொருத்தம் | நீர் வடியக்கூடியது, களி, கிரவல் தன்மையுடைய இருவாட்டி மண், மண்ணீரினளவு குறைவு | 1000 - 2000 |
| N1 | தற்பொழுது பொருத்தமற்றது | நீர்தேங்கும் இடம், களிமண், உயர் சவர்த்தன்மை இருக்கும் ஆழம் குறைந்த மண்படை | - |
| N2 | முற்றுமுழுதாகப் பொருத்தமற்றது | பாறைகள் நிறைந்த இடம் | - |

தென்னை முக்கோண பகுதிகளிலேயே சிறப்பான இடப்பொருத்தப்பாடு வரைபடம் காணப்படுவதால் அங்குள்ள தென்னைகளின் விளைச்சல் அதிகமாக இருக்கும்.

எனவே எமது பகுதி தென்னைகளின் விளைச்சலை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகரிக்க முடியாது என்பதனை இடப்பொருத்தப்பாட்டு வரைபடம் குறிப்பிடுகிறது. ஆகையால் எமது பகுதிகளில் ஒரு ஏக்கருக்கான உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு ஊடுபயிர்ச் செய்கையினாலோ அல்லது கலப்புப்பயிர்ச் செய்கையினாலோ அல்லது கலப்புப் பண்ணை முறையினாலோ தான் முடியும்.

புதிதாக வாங்கப்பட்ட காணியை துப்புரவு செய்து கொங்கிறீட் தூண் நட்டு , முட்கம்பி வேலி அமைத்து கிணறு அல்லது குழாய்க்கிணறு அடித்து தென்னை நடுகை செய்வதற்கு ஏக்கருக்கு ஏறத்தாழ 2.5 இலட்சம் செலவாகும். இச் செலவிற்குரிய பணத்தினை மீள எடுப்பதற்கு ஏறத்தாழ 18 - 19 வருடங்கள் செல்லும். ஆனால் இதே காணியில் தென்னையுடன் கூடிய ஊடுபயிர்களையோ அல்லது கலப்புப்பயிர்களையோ செய்கை பண்ணுவதன் மூலம் நாம் செலவழித்த பணத்தினை ஏறத்தாழ 3 - 4 வருடங்களிற்குள் மீள எடுக்கக்கூடியதாக இருக்கும்.

## தென்னையுடன் வாழை செய்கை




தென்னையைப் பொறுத்த வரையில் மகரந்தச் சேர்க்கை, கருக்கட்டல் என்பன சிறப்பாக நடைபெறுவதற்கான வெப்பநிலை 26 - 32$^0$C ஆகக் காணப்படும். இவ் வெப்பநிலை வீச்சில் தளம்பல் நிலை ஏற்பட்டால் மேற்கூறிய செயன்முறைகள் சிறப்பாக நடைபெறாமல் பூக்கள், குரும்பைகள், காய்கள் கொட்டப்படும். பல ஆராய்ச்சி முடிவுகளின்படி தென்னைகளுக்கிடையில் செய்யும் ஊடுபயிர் மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கையின் மூலம் அவற்றின் இலைத் தொகுதியிலிருந்து வெளியேறும் நீராவியானது சுற்றுப்புறத்தில் ஓர் குளிர் வலயத்தை தோற்றுவிப்பதனால் இவ்விடத்தில் வெப்பநிலையானது 3- 4$^0$C குறைவாகவே இருக்கும். இதனால் சிறப்பான முறையில் மகரந்த சேர்க்கை , கருக்கட்டல் என்பன நிகழ்வதால் விளைச்சல் கணிசமானளவிற்கு அதிகரித்துக் காணப்படும்.

ஈஸ்வரன் சற்குணன்
B.Sc (Agri)M.Sc(Aqua)
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி
.தென்னைப்பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

## கேரள கஞ்சா ஒருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கேரள கஞ்சா ஒரு தொகையுடன் வான் ஒன்றில் பயணித்த ஒருவர் வனாத்தவில்லு பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று தினம் வனாத்தவில்லு - புத்தளம் வீதியில் 6 ஆவது மைல் கல் பிரதேசத்தில் குறித்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

வானிலிருந்து 1.19 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து படகு மூலம் எடுத்துவரப்பட்டதாக கூறப்படும் குறித்த கேரள கஞ்சா தொகை வனாத்தவில்லு - கரதிவ் பிரதேசத்தில் வைத்து கைமாற்றப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி 20வயது யுவதி படுகொலை

### காதலால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாம்

(கொழும்பு)

அவிசாவளை - யாஹெலவத்தை - குடாகம பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 20 வயது யுவதி ஒருவர் நேற்றுக்காலை கொலை செய்யப்பட்டுள்ளார்.

காதல் தொடர்பினால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, பலாங்கொடை - சியம்பலாகஸ்வத்தை பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், இதன்போது படுகாயமடைந்த நிலையில் அவர் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பலியாகியுள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரை அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)




## ஒரு நாள்கூட சிறையிலிருக்க பிடிக்கவில்லை

### பசில் ராஜபக்ஷ கூறுகிறார்



ஒருநாள் கூட சிறையில் இருப்பது தமக்கு பிடிக்கவில்லை என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கலாவாவியை நிர்மாணித்த தாதுசே மன்னரை அவரது மகனான காசியப்ப மன்னன் அழைத்து சொத்துக்கள் எங்கே என கேட்ட போது, கைகளில் நீரை ஏந்தி இதுவே எனது சொத்து எனக் கூறியிருந்தார்.

என்னிடமும் அவ்வாறு கேட்கின்றார்கள். மகிந்தவுக்கும் விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான விடயங்கள் இந்த ராஜபக்ஷக்களுக்கு புதிய விடயமல்ல. என்னை கைது செய்த போது மகிந்த என்னைப் பார்வையிட வந்தார்.

என்ன கஷ்டமா ஒரு மூன்று மாத காலம் உள்ளே இருக்கலாம் தானே எனக் கூறினார். ஆனால் எனக்கோ ஒரு நிமிடம் கூட சிறையில் இருக்க பிடிக்கவில்லை.

எவ்வாறெனினும் ராஜபக்ஷக்களை அச்சுறுத்தி விட முடியாது. எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகித்தாலும் அதனை முறியடிக்க முடியும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## அரசாங்கத்துடன் இணையமாட்டேன்

### சமல் ராஜபக்ஷ அறிவிப்பு



அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மிகவும் பலம்பொருந்திய பதவி ஒன்று வழங்கப்பட உள்ளதாகவும், அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப் போவதாகவும் வெளியான தகவல்களில் எவ்வித உண்மைகளும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மட்டுமே தாம் பங்குபற்றியதாகத் தெரிவித்துள்ள அவர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றமையானது அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக அர்த்தப்படாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மணிவிழாக் காணும் ஆசிரியப் பெருந்தகையே! வாழ்த்துகின்றோம் பலகோடி!

விந்தைமிகு மனத்துடன்
இங்கிதமா கதை பேசி
பாடசாலையில் பவனி வந்து
பக்குவமாய் கடமை புரிந்தீர்
-என்றும்
பல்லாண்டு வாழ அகவை
அறுபதில் அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்!
நீடூழி வாழி !



திருமதி
**வனஜா சிவபாதவிருதயர்**
(பயிற்றப்பட்ட ஆங்கில பாட ஆசிரியை, பிரதி அதிபர்)

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்.

(8353)


## கல்யாண மாலை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:22<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/7068 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 26 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4579 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 51செவ் 2 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7069 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 65சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HDES Eng<br>தொ.இ: G/4582 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:IT, HND Eng/ தனியார் தொழில் லண்டன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7072 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BCA/தனியார் தொழில் இந்தியா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4588 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: சூரிசெவ் 3இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7073 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்BA, MA/விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4596 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# லிபியா அருகே கடலில் சிக்கித் தவித்த 3000 புலம்பெயர்ந்தோரை இத்தாலி மீட்டது







(ரோம்)

லிபியாவில் இருந்து மத்திய தரைக்கடல் வழியாக படகுகள் மூலம் ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற சுமார் மூவாயிரம் குடியேறிகளை மீட்டுள்ளதாக இத்தாலிய கடலோரக் காவல் படையினர், தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டுப்போரால்நிலை குலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள்,சிறிய படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. அண்மைக்காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது.

இதுதவிர, கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலி நாட்டுக்கு புகலிடம் தேடி வரும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல் போனதாகவும், கடலில் மூழ்கி இறந்து விட்டதாகவும் தெரிகின்றது. இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தபடியாகவே உள்ளனர்.

அன்காரா நாட்டு கடல் எல்லை வழியாக கிரீஸ் நாட்டுக்குள் நுழைந்து விடாமல் அங்கிருந்து பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று அங்கே அகதிகளாக குடியேறி விடலாம் என்பது இவர்களின் விருப்பமாக உள்ளது.

எனவே, இரத்தத்தை உறையவைக்கும் குளிர் காற்று, பசியால் அலையும் சுறா, திமிங்கலம் உள்ளிட்ட இராட்சத மீன்களின் தாக்குதல் மற்றும் பேரலைகளுக்கு மத்தியில் தங்களது உயிரைப் பணயம் வைத்து இவர்கள் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் இரண்டு இலட்சம் குடியேறிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டபுறம்பாக நுழைந்துள்ளனர். இவர்களில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் துருக்கி வழியாக வந்துள்ளனர். கடல் பயணத்தின்போது நிகழ்ந்த எதிர்பாராத விபத்துகளில் சிக்கி மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கடந்த ஒன்பது மாதங்களில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று மட்டும் மத்திய தரைக்கடல் வழியாக 22 படகுகள், இரு இயந்திரப் படகுகள் மூலம் இத்தாலி நாட்டு கடல் எல்லையை கடக்க முயன்ற சுமார் 3000 பேரை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மிலன் நகரை ஒட்டியுள்ள கடல்பகுதியில் தடுத்து நிறுத்தி மீட்டுள்ளனர்.

இதைப்போன்ற ஆபத்தான கடல் பயணங்களின் மூலம் கடந்த ஆண்டுவரை பலியானவர்களின் எண்ணிக்கை சுமார் ஐயாயிரமாக உயர்ந்துள்ள நிலையில், மத்திய தரைக்கடல் பகுதியில் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் குடியேறிகளை தங்கள் நாட்டு கடற்படையினர் மீட்டுள்ளதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது. (இ-12)

## இந்தியா-ஓமானுக்கு இடையிலான கூட்டு ராணுவ பயிற்சி வெற்றிகரமாக நிறைவு



0

வட. இந்தியாவின் இமாச்சல் பிரதேசத்தில் இடம் பெற்று வந்த இந்தியா மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கிடையிலான இராணுவ கூட்டுப்பயிற்சியின் ஆற்றல் அணிவகுப்பு மற்றும் ஒத்திகை நிகழ்வு என்பன வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

சுமார் 72 மணித்தியாலங்கள் நடைபெற்ற நீண்ட நேர மதிப்பீட்டு உடற்பயிற்சியோடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இக் கூட்டு பயிற்சி நடவடிக்கை நிறைவடைந்தது.

இரு நாடுகளினதும் சுமார் 60 வீரர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'அல் நாகா - 2' எனும் பெயர் கொண்ட இப் பயிற்சி நடவடிக்கையில் இரு நாட்டு இராணுவ வீரர்களும் ஹெலிக்கொப்டர் பயிற்சி மற்றும் கிளர்ச்சிகளுக்கு எதிரான பயிற்சி ஆகியவற்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

பயிற்சிகளை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடனுமே இப் பயிற்சிகள் அமைந்ததாக இந்திய இராணுவத்தின் பேச்சாளரான மேஜர் ஜெனரல் நவீன் குமார் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற குடியரசு தின விழாவில் ஓமான் இராணு வம் அணிவகுப்பில் ஈடுபட்டதை சுட்டிக்காட்டியுள்ள மேஜர் ஜெனரல் நவீன்குமார், இரு நாடுகளின் நல்லுறவை வலுப்படுத்துவதற்கு அடித்தளமாக இந் நடவடிக்கை அமைந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் ஓமானுக்கு இடையிலான முதலாவது கூட்டு இராணுவ பயிற்சி கடந்த 2015ஆம் ஆண்டு ஓமானில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## மக்கள் கொடுத்த ஆதரவையெல்லாம் ஜெ.தீபா அலட்சியப்படுத்தி வருகிறார்

### முன்னாள் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு



மக்கள் கொடுத்த ஆதரவை எல்லாம் தீபா அலட்சியப்படுத்தி வருகிறார் என முன்னாள் எம்.எல்.ஏ. சவுந்தரராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் கட்சியில் பிளவு ஏற்பட்டது. அப்போது ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா அரசியலுக்கு வர வேண்டும் என்று தமிழகம் முழுவதிலும் இருந்து அ.தி. மு.கவினர் வலியுறுத்தினர்.

அவர்களில் அ.தி.மு.க. நிர்வாக்குழு உறுப்பினர்களில் ஒருவரும், திருச்சி முன்னாள் எம்.எல்.ஏவுமான சவுந்தரராஜனும் ஒருவர் ஆவார். தீபா தீவிர அரசியலில் ஈடுபடவேண்டும் என்று முதலில் குரல் கொடுத்தவரும் அவர்தான்.

இதற்காக திருச்சியில் தீபா பேரவையை தொடங்கி பல்வேறு கூட்டங்களை நடத்தி ஆதரவாளர்களையும் திரட்டினார். ஆனால் கடந்த சில நாட்களாக தீபாவின் நடவடிக்கையில் அதிருப்தி அடைந்த சவுந்தரராஜன் தீபா பேரவையில் இருந்து விலகுவதாகவும் அறிவித்தார்.

தீபாவின் தெளிவற்ற அரசியல் பயணம், அவரது கணவர் மாதவன் தனிக்கட்சி போன்ற காரணங்களால் தீபாவின் மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் குறைந்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பாக முடிவெடுக்கும் வகையில் திருச்சியில்நேற்று முன்தினம் மாநில அளவிலான ஆலோசனை கூட்டத்திற்கு சவுந்தரராஜன் அழைப்பு விடுத்தார். இதில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் சவுந்தரராஜன் பேசியதாவது,

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா வழியில் அவரது அண்ணன் மகள் தீபா அ.தி.மு.கவை வழி நடத்துவார் என்று எதிர்பார்த்து தான் தீபா பேரவையை தொடங்கி அவருக்கு ஆதரவாகவும் செயற்பட்டோம்.

ஆனால் பேரவை பொறுப்பாளர்களை நியமிப்பதில் குழப்பத்தை ஏற்படுத்தினார். அவ்வாறு நியமிக்கப்பட்ட நிர்வாகிகளை சந்தித்து கருத்துக்களை கேட்க மறுத்தும், தவிர்த்தும் வருகிறார். அவர் இயக்கம் தொடங்கியபோது, மக்கள் கொடுத்த ஆதரவை எல்லாம் அலட்சியப்படுத்தி வருகிறார். ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள சந்தேகங்களை வெளி உலகுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.

அதிலேயும் முதலில் சந்தேகம் இருப்பதாக கூறிய தீபா பின்னர் சந்தேகம் இல்லை என்று கூறிவிட்டார். தீபா பேரவைக்கு பொறுப்பாளர்களை நியமித்தது தனக்கே தெரியாது என்றும், முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்துடன் இணைந்து செயலாற்றுவேன் என்றும் மாற்றி, மாற்றி பேசி வருகிறார்.

இதையெல்லாம் தாண்டி தற்போது தீபாவின் கணவர் மாதவன், பேரவையில் தீய சக்தி நுழைந்துவிட்டது என்று கூறுகிறார். அவர் யாரை தீய சக்தி என குறிப்பிடுகிறார் என தெரியவில்லை. எனவே எனது நிலையை விளக்கி இந்த இயக்கத்தில் இருந்து வெளியேறுவதற்காகவும், என்னோடு இணைந்து செயற்பட்ட நிர்வாகிகளையும் சந்தித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# பாக்.இந்து திருமண மசோதா சட்டமானது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இந்து திருமண மசோதா சட்டமானது. இதன்மூலம் இந்துக்கள் திருமணம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. திருமணத்தின் போது இந்துக்கள் தங்கள் மதச்சடங்குகளை முறைப்படி செய்ய இச்சட்டம் வழிவகை செய்கிறது.

பாகிஸ்தானில் இந்துக்களின் திருமணத்தை முறைப்படுத்த தனியாக சட்டம் இல்லை.

எனவே முறைப்படி இந்து திருமண சட்டம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் பிரதமர் நவாஸ் செரீப் தலைமையிலான அரசு பாராளுமன்றத்தில் இந்து திருமண சட்ட மசோதா கொண்டு வந்து தாக்கல் செய்தது.

இந்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து மசோதா ஜனாதிபதி மம்கைன் உசேன் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

அதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்து நேற்று முன்தினம் கையெழுத்திட்டார். அதைத் தொடர்ந்து இந்து திருமண மசோதா சட்டமானது. (இ-12)

# கிம் ஜாங் உன்னின் செயற்பாட்டை கடுமையாக விமர்சித்த ட்ரம்ப்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மிகவும் மோசமான வகையில் செயற்பட்டு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

உலக நாடுகளை தொடர்ச்சியாக அச்சுறுத்தி வரும் வடகொரியா, நேற்று முன்தினம் புதிதாக உயர் உந்து சக்தி கொண்ட இயந்திர பொறியொன்றை சோதித்திருந்த நிலையில், இது தொடர்பில் புளோரிடாவில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.


அத்துடன், வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நிர்வாக அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, பியாங்யாங் அணு ஆயுத இயக்கத்தை தடுக்க சீனா போதிய ஆதரவை வழங்கவில்லை எனவும் ட்ரம்ப் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-12)

# பெருவில் இரண்டு தசாப்தங்களின் பின்னர் பெருக்கெடுத்த வெள்ளத்தில் 100 பேர் பலி!





( லிமா )

பெருவில் கடந்த ஐந்து நாட்களாக பெய்துவரும் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதுவரை 100 ஆக உயர்வடைந்துள்ளதாக பெரு அரசு தெரிவித்துள்ளது.

மேலும், 800இற்கும் மேலான நகரங்களில் அவசரக் காலநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் லிமாவில் கடந்த திங்கட்கிழமையிலிருந்து குடிநீர் பற்றாக்குறை நீடித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளால் பாலங்கள் உடைந்து மக்களின் போக்குவரத்துப் பாதைகள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு செல்ல முடியாது மக்கள் தத்தளித்து வருகின்றனர்.

பெரு நாட்டில் கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்டுள்ள மிக மோசமான வெள்ளம் மற்றும் நிலச்சரிவு இதுவென கூறப்படுகின்றது. (இ-12)




# கடத்தலை முறியடிப்பதற்கு தீவிரவாத எதிர்ப்பு பயிற்சி




( லண்டன்)

சாத்தியமான தீவிரவாதத் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில், தீவிரவாதிகளின் படகு கடத்தலை முறியடிக்கும் பயிற்சியொன்று பிரித்தானியாவிலுள்ள மிகப் பெரிய ஆறான தேம்ஸ் ஆற்றில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட குறித்த பயிற்சியில் பொலிஸ் அதிகாரிகள், அதிரடிப்படை வீரர்கள், தீயணைப்பு துறையினர், கரையோரப் பாதுகாப்பு படையினர் மற்றும் லண்டன் துறைமுக அதிகாரிகள் என சுமார் 200இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஆற்றில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் பயிற்சியால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், இவ்வாறானதொரு தாக்குதல் குறித்த எவ்வித உளவுத்துறை அச்சுறுத்தலும் இல்லை என்றும் மாநகர பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

எனினும், இவ்வாறான தாக்குதல்களுக்கு லண்டன் பாதுகாப்பு படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சுயாதீன ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டதை அடுத்தே இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-12)

# சிரியாவை உலுக்கிய திடீர் தாக்குதல்

## பாடசாலைகளுக்கு பூட்டு



(டமாஸ்கஸ்)

சிரிய தலைநகரை உலுக்கிய கிளர்ச்சியாளர்களின் திடீர் தாக்குதலின் எதிரொலியாக குறித்த பகுதியிலுள்ள பாடசாலைகள் நேற்று திங்கட்கிழமை முதல் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, துப்பாக்கி மற்றும் குண்டுத்தாக்குதல்களினால் பேரதிர்ச்சிக்கு உள்ளான மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசபடையினரை இலக்குவைத்து கிளர்ச்சியாளர்களால்நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதல்களினால் .சிரிய தலைநகரின் கிழக்கு மாவட்டங்கள் பேரதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளன.

அல்-கொய்தா அமைப்புடன் தொடர்புடைய ஜபத் ஃபதே அல்-ஷாம் அமைப்புடன் இணைந்த கிளர்ச்சிக் குழுக்கள், அரச படையினரின் நிலைகளை இலக்குவைத்து டமாஸ்கஸின் மையப் பகுதியில் குண்டு மற்றும் ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கிளர்ச்சியாளர்களின் முற்றுகைக்கு உட்பட்ட இரு பகுதிகளுக்கு மத்தியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஜோபார் மற்றும் கபூன் மாவட்டங்களிலேயே கடும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.


தொடர்ந்து கிளர்ச்சியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது அரச போர்விமானங்கள் மூலம் 30இற்கும் மேற்பட்ட விமான தாக்குதல்கள் நடத்தப்பட்டு கிளர்ச்சியாளர்கள் விரட்டியடிக்கப்பட்டதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (இ-12)

# ஈரான் புனித ஹஜ் பயணிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதாக சவுதி உறுதி

ஈரான் புனித ஹஜ் பயணிகளுக்கு போதிய பாதுகாப்பும், சிறப்பு பயண ஏற்பாடுகளும் கோரி, சவுதி அரேபியாவுடன் பல கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட ஈரானுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இருநாடுகளுக்கிடையில் இடம்பெற்றுவந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சவுதி தெரிவித்துள்ளது. அத்தோடு ஈரான் புனித ஹஜ் பயணிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையின் முக்கிய நிகழ்வொன்றில், ஹஜ்பயணிகள்கலந்துகொள்ளச் செல்லும் போது, ஏற்பட்ட திடீர் சன நெரிசலில் சிக்கி சுமார் 769 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இதில் 465 பேர் ஈரானை சேர்ந்தவர்கள் ஆவர்.



இந்நிலையில், இதற்கு சவுதி அரசின் கவனயீனமே முக்கிய காரணமென பல நாடுகள் சவுதியை கடுமையாகச் சாடின. அத்தோடு இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரையை ஈரான் புறக்கணிக்கும் எனவும் கூறப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், ஈரானை சேர்ந்தவர்கள் இந்த ஆண்டு ஹஜ் புனித பயணம் மேற்கொள்வதை உறுதி செய்யும் விதத்தில் அனைத்து முன்னேற்பாடுகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சவுதி அரசு அறிவித்துள்ளது.

ஈரானிலிருந்து வழமையாக ஒவ்வொரு ஆண்டும்சுமார் 60 ஆயிரம் பேர் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# ஜெனிவா யோசனை விசாரணைக்கு மேலைத்தேய தரப்பினர் தேவையில்லை

## இலங்கை அரசு திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான ஜெனிவா யோசனை குறித்த விசாரணைகளுக்கு எந்தவொரு மேலைத்தேய தரப்பினரும் தேவையில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



வீரகெடிய பகுதியில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், மனித உரிமைகள் ஆணையாளரின் சிலகருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியது எனவும் சில கருத்துக்களில் உடன்பாடு இல்லை எனவும், பிர தமர் இதன்போது மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## தாயகம் திரும்பும் இலங்கையர்கள்!

இந்திய முகாம்களில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்கள் நாளை மறுதினம் 23 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்னெடுத்துள்ள திட்டத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு 20 குடும்பங்களைச் சேர்ந்த, 36 பேர் நாடு திரும்பவுள்ளனர்.

நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான விமானப் பயணச் சீட்டு மற்றும் உணவு ஆகிய செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## விமலின் விளக்கமறியல் 3 ஆம் திகதி வரை நீடிப்பு



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச எதிர்வரும் 3ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று கோட்டை நீதவான் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்பட்ட வேளையே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான 40 வாகனங்களை தவறான முறையில் பயன்படுத்தி, அரசாங்கத்துக்கு 91 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் விமல் வீரவன்ச கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்ப வேண்டும்

### சபாநாயகர் கரு தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல் வன்முறையற்றதும் தகுதியானவர்களுக்கு தகுதியானவற்றை வழங்கி சிறந்த சமூகமொன்று கட்டியெழுப்பப்படவேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய ஐக்கியம் இன்றி நாடு முன்னோக்கி பயணிக்க முடியாது என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

தேசிய ஐக்கியத்திற்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையம் மற்றும் இலங்கை பத்திரிகை நிறுவனங்கள் ஒருங்கிணைந்து 2006 ஆம் ஆண்டு தயாரித்த தேசிய ஐக்கியத்திற்கான ஊடகப் பணி குறித்த "வெலிகம பிரகடனம்" தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் சபாநாயகர் கரு ஜயசூரிய உரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய சபாநாயகர் கரு ஜயசூரிய, தகவல் அறியும் சட்டத்தை விரைவாக அமுல்படுத்தப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயம். மக்களுக்கு சிறந்த சமூக வாழ்க்கை முறையை பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.



சுயாதீன ஆணைக்குழு செயற்படுகின்றமை திருப்திக்குரிய விடயமாகும். தேசிய ஐக்கியத்திற்கு ஊடகங்கள் பெருமளவு பங்காற்ற முடியும். இதற்காக ஊடகங்கள் சுயமான விமர்சனங்களை மேற்கொள்ள முடியமென்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றுகையில், தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக பெரும்பாலான ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து சுட்டிக்காட்டினார். புதிய அரசியல் யாப்பு தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு பின்புலமாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை கடலோரக் காவல் படைக்கு மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள்



இலங்கை கடலோரக் காவல்படையைப் பலப்படுத்துவதற்கு மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் கட்டப்படவுள்ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இந்த மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களினதும் மொத்த பெறுமதி 180 மில்லியன் ரூபாவாகும்.

இந்தக் கப்பல்களைக் கட்டுவதற்கான செலவை ஜப்பான் வழங்கவுள்ளது.

இலங்கையைச் சுற்றியுள்ள 517,000 சதுர கி.மீ கடற்பகுதியை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடலோரக் காவல் படைக்கு இந்தக் கப்பல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.


கரையோரப் பகுதி, இலங்கை கடல்எல்லைக்குட்பட்ட பகுதி, மற்றும் இலங்கையில் பொருளாதார வலயத்துக்குட்பட்ட ஆழ்கடல் பகுதியில் தேடுதல், மீட்பு, சட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் இலங்கை கடலோரக்காவல்படை ஈடுபடும்.(இ-7)

## அமெரிக்க கப்பல் புறப்பட்டது

இலங்கையில் இரண்டு வாரங்களாகத் தரித்து நின்று கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த அமெரிக்க கடற்படையின் அதிவேகப் போக்குவரத்துக் கப்பலான யு.எஸ்.என்.எஸ். போல் ரிவர் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

கடந்த மார்ச் 6ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த யுஎஸ்என்எஸ் போல் ரிவர் கப்பலில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் இணைந்து, மார்ச் 7ஆம் திகதி பசுபிக் கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்தனர்.

மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த மீட்பு பணிகளில் ஈடுபடுவது தொடர்பான இந்த ஒத்திகைகள், 12 நாட்கள் நடைபெற்றன. கடந்த 18ஆம் திகதி இந்த கூட்டுப் பயிற்சிகள் நிறைவடைந்தன.



இந்தக் கூட்டுப் பயிற்சியின் போது, பல்வேறு மருத்துவ முகாம்கள், சுகாதாரப் பணிகள், அபிவிருத்திப் பணிகளில் அமெரிக்க, ஜப்பான், அவுஸ்திரேலிய அதிகாரிகள் ஈடுபட்டனர்.

கூட்டுப் பயிற்சி நிறைவடைந்ததையடுத்து, யுஎஸ்என்எஸ் போல் ரிவர் கடந்த மார்ச் 18ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

அடுத்து மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு இந்தக் கப்பல் செல்லவுள்ளது. (இ-7)

# விரைவான முன்னேற்றத்தை மீண்டும் வலியுறுத்தவுள்ள செயிட் அல் ஹூசைன்

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர்செயிட் அல் ஹூசைன் இலங்கை தொடர்பாக முன்வைத்த எழுத்துமூல அறிக்கை தொடர்பான விவாதம் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.


இதன்போது விவாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை தொடர்பான அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்செயிட் அல் ஹூசைன் இலங்கை தொடர்பாக பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

அதன்பின்னர் பதிலளிக்க உரிமை உள்ள நாடு என்ற வகையில் இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஹூசைனின் உரைக்கு பதிலளித்து உரையாற்றுவார்.

தொடர்ந்து மனித உரிமை உறுப்புநாடுகளும் உறுப்புரிமை அற்றநாடுகளும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை வெளியிடவுள்ளன.

அதேவேளை புதன் கிழமை இலங்கை தொடர்பான உரையை நிகழ்த்தவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் இலங்கையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் விரைவான முன்னேற்றத்தை வெளிக்காட்டவேண்டுமென வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக ஏற்கனவே இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டிருந்த செயிட் அல் ஹூசைன் இலங்கையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் கவலைக்குரிய விதத்தில் தாமதமாக செயற்படுவதாகவும் விரைவான முன்னேற்றத்தை வெளிக்காட்ட வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.



மேலும் சர்வதேச நீதிபதிகள் உள்ளடங்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறையை முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சட்டமூலங்களை நிறைவேற்ற வேண்டுமெனவும் ஹூசைன் தெரிவித்தார். (இ-7)

# குருவுக்கு எதிராக கேள்வி கேட்டு கட்சியை விட்டு வெளியேறினேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

எனது அரசியல் குரு தோழர் சண்முகதாஸன் ஆவார். அவரது பாசறைக்குள்ளேயே அவருக் கெதிராக கேள்வி கேட்டு கட்சியை விட்டு வெளியேறியவன் நான் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

லெனின், கார்ல் மாக்ஸ், மகாத்மா காந்தியின் புகைப்படங்கள் எனது உத்தி யோக பூர்வ வாசஸ்தல மாநாட்டு அறையில் இன்றும் உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# மே மாதம் 15ம் திகதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும்

## இல்லையேல் இருவரின் வீடுகள் முற்றுகை; கூட்டு எதிர்க்கட்சி கூறுகிறது

(கொழும்பு)

மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாது போனால், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை அமைச்சரின் வீட்டையும், தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரின் வீட்டையும் நாம் சுற்றிவளைப்போம் என கூட்டு எதிர்க்கட்சி சார்பு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மே மாதம் 15 ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்று 6 வருடங்கள் நிறைவடைகின்றன.

அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை தள்ளிப் போட்டு வந்தால், உள்ளூராட்சி சபைக்கு செலுத்தும் சகல வரிகளையும் செலுத்தாது விடுவோம் எனவும் மாத்தறை பேருந்து தரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். (இ-7)



# கூட்டு எதிர்க் கட்சியின் கூட்டங்கள் அரசிற்கு பாரிய தலையிடியாக மாறும்

## மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் ஆரம்பித்துள்ள எதிர்ப்புக் கூட்டங்கள் அரசாங்கத்துக்கு பாரிய ஒரு தலையிடியாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ள இந்த எதிர்ப்பு கூட்டத் தொடர் நாடுமுழுவதும் பரவும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கூட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நாடு முழுவதும் உள்ள மக்கள் ஒன்று திரண்டு வருகின்றனர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அதிருப்தியடைந்துள்ள மக்கள், அரசாங்கத்தை விரட்டும் தூரமாக ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்கம் மக்களுக்காக செய்த எந்தவொரு நன்மையும் இல்லை.

இந்தக் கூட்டங்களின் மூலம், அரசாங்கத்துக்கு தகுந்த பாடம் ஒன்றை புகட்டவுள்ளோம் எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

## அழகாகப் பிரிவது எப்படி

எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது. என்னோடு ராமகிருஷ்ணா உயர் நிலைப் பள்ளியில் படித்த ஒரு பையனின் அப்பாவுக்கு மாற்றல் ஓர்டர் வந்தது. பயல் ஆடிப் போனான்.

வகுப்பு முடிந்ததும் வாசலில் நின்று கொண்டான். ஒவ்வொருவருடனும் கைகுலுக்கிக் கண்கலங்கச் சொன்னான்.

எங்க அப்பாவை வேறு ஒரு இடத்துக்கு மாத்திட்டாங்க. உங் களையெல்லாம் பிரியவே கஷ்டமா இருக்கு. அந்த இடத்துக்கு வந்தா என் வீட்டுக்கு வாங்க.

மாலை வீடு வந்த பின்பும்கூட மனமே சரியில்லை.

இதயத்தின் ஒரு பகுதியை அவன் பிரித்து எடுத்துக் கொண்டு போய்விட்டதைப் போலிருந்தது.

ஆனால் எதற்குமே அசராத ஜென்மங்களும் உண்டு. பல வருடங்களாக ஒன்றாக வேலை பார்த்திருப்பார்கள். திடீரென்று காணாமல் போய்விடுவார்கள். கேட்டால் அதிருகிற மாதிரிப் பதில் வரும்– அவரோ? அவருக்கு டுபாயில் வேலை கிடைச்சுப் போயிட்டாரே! என்று அடப் பாவி மனிதா! ஒன்றாகப் பழகியதும் ஒரு கோப்பியை இரண்டாகப் பகிர்ந்து சாப்பிட்டதும் எல்லாம் சம்பிரதாயம் தானா?

முதலாளி நல்ல வேலையா ஒண்ணு கிடைச்சிருக்கு, சம்பளம் அதிகம். என்னை நீங்க வாழ்த்தி அனுப்ப வேண்டும்.

அல்லது, நானே என் மாமனார் உதவியோட சொந்தமாய் தொழில் தொடங்கலாம் என்று இருக்கேன் சேர்.

எங்கே இருந்தாலும் நல்லா இருப்பா. நல்லாப் போயிட்டுவா!

இப்படி எத்தனை நிறுவனங்களில் நடக்கும்? ஆனால் நடக்க வேண்டும். ஆனால் வாழ்த்த வேண்டிய நிலையிலும் தகுதியிலும் இருப்பவர்கள் மனப்பூர்வமாக வாழ்த்தத் தான் வேண்டும்! அவர்களுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ அவர்களுக்கு உடன்பாடோ இல்லையோ இந்தக் கடைசி நிமிடப் பெருந்தன்மை தான் அந்த ஊழியரை இது அவர் கொடுத்த வாழ்வு என்று காலமெல்லாம் வாழ்த்த வைக்கும்.

என் உறவினர் ஒருவர் வீட்டில் குடியிருந்தவர்கள் வீட்டைக் காலி செய்து கொண்டு போனார்கள். அக்கம் பக்கமெல்லாம் சொல்லிக் கொண்டு போனார்கள். உங்கள் வீட்டையும் உங்கள் எல்லோரையும் பிரியவே மனமில்லை என்று கண்கலங்கி விடைபெற்றார்கள். காணக் கிடைக்காத காட்சி பிரிவு என்பது இப்படி இருக்க வேண்டும்.


கொள்ளைக் கூட்டமா என்ன சொல்லாமல் கொள்ளாமல் இரவோடிரவாகக் காலி செய்ய?


நட்பை முறித்துக் கொண்டும், தொழிலை முறித்துக் கொண்டும் (பங்குதாரர்) ஏன் கணவன்–மனைவியே பிரிந்து வாழ நேர்ந்தாலும் சரி அதிலும் ஒரு நாகரிகம் இருக்க வேண்டும்.

பிரிந்தாலும் ஆழமாகப் பிரிய வேண்டும்.

அடித்துக் கொண்டும் அசிங்கம் பண்ணிக் கொண்டும் அல்ல!

**லேனா தமிழ்வாணன்**








யாழ். ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் அறிவொளி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. (படங்கள் :உ.சாளின் )

### ஆவா குழு போன்ற சமூக விரோத கும்பல்களை உருவாக்கி

# உலகம் போற்றும் பாரம்பரியத்தை சிதைக்க இராணுவப் புலனாய்வுப் பிரிவு சதிமுயற்சி

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**உலகம் போற்றும் பாரம்பரியத்தை சிதைப்பதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு பின்னணியில் இருந்து செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், புலனாய்வுப் பிரிவினரின் தயவில் உருவாக்கப்பட்டதே ஆவாகுழு போன்ற சமூக விரோத கும்பல்களாகும் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.**

ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் நேற்று முன்தினம் அறிவொளி சனசமூக நிலையத்தில் நிலைய தலைவர் க.தம்பிராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் என்றால் உலகம் முதலில் யாழ்ப்பாணத்தையே பார்க்கின்றது. அந்தளவுக்கு யாழ்ப்பாணம் என்பது தமிழ் மக்களுடைய அடி நாதமாக இருந்து வருகின்றது.

இவ்வாறான ஒரு பாரம்பரியத்தையே சிதைப்பதற்கு சிலர் முயன்று வருகின்றனர். கட்டுக்கோப்பான இனமாக வாழக்கூடாது என்றும் திட்டமிட்டு வாள்வெட்டு போன்ற சமூக விரோத கும்பல்களை ஆதரித்து எமது சமூகத்தின் மத்தியில் ஒரு பயப்பீதியை ஏற்படுத்துகின்றனர். ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ள போதிலும் வாள்வெட்டுக்கள், போதைப் பொருள் கடத்தல் என்பன சாதாரணமாக நடைபெறுகின்றது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இவை ஒன்றும். நடைபெறவில்லை மக்கள் சுதந்திரமாக எந்த பயமும் இன்றி நடமாடினார்கள். ஆனால் போருக்கு பின்னர் தான் இந்த சமூக விரோத செயல்கள் தலை தூக்கியுள்ளன. இதை இராணுவமும் பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக்கொண்டுள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையிலும் எமது உரிமைகளுக்காகவும் எம் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு நீதி கோரியும் போராடி வருகின்றோம்.

ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் எமது மக்களுடைய வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் போராடிக் கொண்டுள்ளார்கள். அரசியல் கைதிகள் இன்று வரை விடுதலை இன்றி சிறைகளுக்குள்ளேயே உள்ளார்கள். இவ்வாறு அனைத்து தரப்பினருக்கும் எந்த மாற்றமும் கிடைக்கவில்லை. இதனால் தான் நாங்கள் போராடி வருகின்றோம்.

இந்த தொடர் போராட்டத்தை சிதைக்கவே இராணுவ புலனாய்வு பிரிவினர் பின்னணியில் இருந்து சமூக விரோத குற்றச்செயல்களை ஊக்குவிக்கின்றனர். இதனை எதிர்த்து போராடி கல்வியிலும், ஒழுக்கத்திலும் சாதிப்பதற்கு எமது மாணவர்கள் முன்வரல் வேண்டும். வடக்கு மாகாண சபை உங்களுக்கு என்றும் ஆதரவாக இருக்கும். இதுபோன்ற நிகழ்வுகளை அனைத்து ஆலயங்களும் நடத்த வேண்டும். இதற்கு இளைஞர்கள் முன்வரல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக பிரித்தானியாவில் பாரிய போராட்டம்





பிரித்தானியாவில், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்ட அறவழி உண்ணா விரதப் போராட்டமானது பேரேழுச்சி எதிர்ப்பு போராட்டமாக மாற்றம் பெற்றுள்ளது.

இந்த போராட்டம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக்கும் முகமாகவும், தமிழ் மக்களின் பிரச்சினையை முன்னிறுத்தியும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

துண்டுப்பிரசுரம் விநியோகித்தல், கையெழுத்து போராட்டம் மற்றும் இலங்கையின் இனவழிப்பு தொடர்பான பிரசாரம் போன்றன 10 டவுனிங் வீதியில் பிரதமர் இல்லத்திற்கு முன்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த 26ஆம் திகதி தொடங்கிய உண்ணாவிரதப் போராட்டம்22வது நாளான நேற்று முன்தினம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களும் பாராளுமன்ற உறுப் பினர்களும் பெருமளவில் கலந்துகொண்டு போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதன்போது, இலங்கையில் உள்ள இராணுவ தடுப்பு வதைமுகாம்களை மூடுமாறு கோரி கோசங்களையும் எழுப்பியுள்ளனர். இப்போராட்டங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வரையும் முன்னெடுக்கப்படவுள்ளதால் இந்த நாட்களில் ,பிரித்தானிய வாழ்தமிழர்களை திரளாக வருகைதந்து கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-12)

# ஐ.நாவுக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்க பந்துல - ரோஹித ஜெனிவாவுக்குப் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு எதிரான போராட்டமொன்றில் பங்கேற்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்தனவும் ரோஹித அபே குணவர்தனவும் ஜெனிவாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நோக்கி இவர்கள் இவரும் நேற்று முன்தினம் இரவு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பந்துலவும் ரோஹிதவும் ஜெனிவா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதான காரியாலயத்திற்கு எதிரில் நாளை 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு போராட்டமொன்று நடைபெறவுள்ளது.

உலக இலங்கை அமைப்பு என்ற அமைப்பினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படைவீரர்களுக்கு எதிராகவும் போரை வழிநடத்திய அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் குற்றம் சுமத்தப்படுவதனை எதிர்த்து இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக அமைப்பின் தலைவர் வசந்த கீர்த்திரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாது என கோரிக்கை விடுக்கும் வகையில் எதிர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, கனடா, ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது மக்களின் வாக்குரிமையை முடக்கி வருவதாகவும் இதனை கண்டிப்பதாகத் தெரிவித்து மகஜர் ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் வழங்கப்படவுள்ளது.

உடனடியாக தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என நிரூபிக்கும் நோக்கில் 200 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மனித உரிமைப் பேரவையிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யக்கூடாது போர்க்குற்றச் செயல் விசாரணைகளில் சர்வதேச தலையீடு அவசியமற்றது எனக் கூறும் இந்தத் தரப்பினர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் கோரி மகஜர் ஒன்றை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல் கலா நிலையம் ஜனாதிபதியால் திறப்பு

(கொழும்பு)

தலைவர்கள் முன்னிலையில் அனைத்துக்கும் ஆமாம் சாமி போடுகின்ற அரசியல்வாதிகளாக அல்லாமல், அவ்வாறல்ல இவ்வாறு என விடயங்களைச் சுட்டிக்காட்டக் கூடிய இளம் அரசியல்வாதிகளை நாட்டில் உருவாக்க வேண்டிய தேவை உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கலா நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசர்கள் முன்னிலையில் துதிபாடும் அரசியல் பாரம்பரியத்திற்கு இனிவரும் காலங்களில் இடம்கிடையாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அறிவு மற்றும் சிந்தனையுடன் செயற்படும் அரசியல் இயக்கத்திற்காக இந்த கலா நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தார்.

இன்று தூய அரசியல் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதற்குள்ள முக்கிய சவால் அரசியல்வாதிகளுக்கு அனுபவம் இல்லாமையாகும் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, சில நேரங்களில் வீழ்ந்து சில நேரங்களில் எழுந்து முன்னேறிவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பயணம் தொடர்பாகக் கட்சியின் அனைத்து அரசியல்வாதிகளிடமும் தெளிவு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-3)

# மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் மீண்டும் நீர்மட்டம் அதிகரிப்பு

(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் மீண்டும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக நிலவும் மழையுடனான வானிலையை அடுத்து நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

அதற்கமைய நீர்த்தேக்கங்களில் 31 கனஅடியாக காணப்பட்ட நீர், தற்போது 37 கன அடிவரை உயர்வடைந்துள்ளதாக மின் சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும், முழு மின் உற்பத்தி 87 வீதமாகவே காணப்படுவதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் காணப்படும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குளங்களில் 40 வீதம் நீர்மட்டம் காணப்படுவதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே நாட்டின் சில பகுதிகளில் இன்றும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1019

Search for people, places and things — Nagendram Home

**லைலா**




**தாமிரா**




**மயூரன்**




**தயாளன்**






**டது**




**சர்மி**





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்த - சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்தின் இணுவில் கிளை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட "திருமுறை நெறிச்செல்வர்" பட்டமளிப்பும், சைவ நீதி மற்றும் உண்மை விளக்கக் கதவம் நூல்கள் அறிமுக விழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை கலாசார மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் முதன்மை வீருந்தினராகக் கலந்து கொண்டார்.

நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பித்த இந்நிகழ்வில், சைவ சித்தாந்த - சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர். பயிற்சி மைய இயக்குநர் சைவப்புலவர் "சித்தாந்தச் செம்மணி" செல்லையா நவநீதகுமார் பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இதேவேளை, "சைவநீதி" (காசி யாத்திரைச் சிறப்பு மலர்) மற்றும் உண்மை விளக்கக் கதவம் ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. இந்நூல்களின் அறிமுக உரையை முறையே விரிவுரையாளர் பால சண்முகனும், சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும் வழங்கினர். (படங்கள்: பொ.சோபிகா)

# கிராம மட்ட அமைப்புக்களுடன் அங்கஜன் கலந்துரையாடல்




தெல்லிப்பழை அளவெட்டி வடக்கு கிராம செயலகத்தில் கிராம மட்ட அமைப்புக்களையும் மக்களையும் சந்தித்து கிராம அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் முகமாக கலந்துரையாடல் ஒன்று கடந்த 15 ஆம் திகதி மாலை 5 மணியளவில் கிராம சேவையாளர் கணேசதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

மக்கள் தனித்தனியே தமது கோரிக்கைகளை தெரிவித்தனர்.

அந்த வகையில் அளவெட்டி வடக்கு விவசாய சம்மேளனம் கிராம மட்ட வேலைத்திட்டம் ஊடாக தமது சம்மேளனத்திற்கான கட்டடம் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தது.

கிராம அபிவிருத்தி சங்கம் கலாசார மண்டபம், புனரமைக்கப்படாத வீதிகள் புனரமைத்தல் தொடர்பாகவும் விளையாட்டுக் கழக மைதானம் புனரமைத்தல் தொடர்பான கோரிக்கைகளையும் விடுத்திருந்தது.



மேலும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சுழற்சி முறை கடன் வழங்குவதற்காக நிதியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கையை விடுத்திருந்தது.

பொது மக்களால் சமுர்த்தி பயனாளிகள் எண்ணிக்கையை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.


அத்துடன் வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், உங்களது சகல கோரிக்கைகளையும் ஜனாதிபதியிடம் முன் வைப்பேன்.

இக் கிராமத்தின் முக்கியமான இரு வீதிகளின் புனரமைப்பு தொடர்பான மதிப்பீட்டினைச் செய்து பிரதேச சபையிடம் ஒப்பமிட்டுத் தருமாறும் சுழற்சி முறை கடன் தொடர்பான திட்டவரைபை செய்து தருமாறும் இக் கிராமத்தில் வீட்டுத் திட்டம் தொடர்பாக தாம் படிமுறை யான செயற்பாட்டின் மூலம் வெற்றியளிக்கும் நிலையில் காணப்படுவதாகவும் இக் கிராமத்தின் அபிவிருத்திக்கு தாம் பெரிதும் உதவுவேன் எனவும் கூறினார். மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மெகா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் அபிவிருத்திக்காக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் 25 ஆயிரம் நிதி உதவியும் வழங்கப்பட்டது. (இ-3-23)

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. நேற்று அதிகாலை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அடியவர்கள் வருகை தந்து பொங்கி படையலிட்டு வழிபாட்டில் ஈடுபட்டனர். தொடர்ந்து பங்குனி மாதத்தின் நான்கு திங்களும் சிறப்பு உற்சவம் இடம்பெற உள்ளது. இதேவேளை ஆரம்ப நாளான நேற்று ஆலயத்திற்குள் வைத்து சிறுமி ஒருவரின் தங்கச்சங்கிலியும் காப்பும் களவாடப்பட்டுள்ளதாக ஆலய வளாக காவல் பணியில் உள்ள பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (படங்கள்: கிஷோர்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் இருபுறங்களிலும் காணப்படும் கழிவுநீர் வாய்க்கால் பார்த்தீனியச் செடி, புற்கள் வளர்ந்த நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு கழிவு நீரும் தேங்கிக் காணப்படுகின்றது. (படங்கள்: தெல்லிப்பழை செய்தியாளர்)

# சாயி சமர்ப்பணம் தொடர் - 2 இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன் விழாவையொட்டி சாயி பக்தர்கள் அனுபவப் பகிர்வு தொடர்பில் சாயி சமர்ப்பணம் தொடர்-2 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை இராமநாதன் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம் பெறும்.

இத் தொடரில் இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் வடபிராந்திய முன்னாள் தலைவரும், சாயி மார்க்கம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் யாழ்ப்பாணம் சாயி நிலைய முன்னாள் தலைவரும், யாழ். போதனா வைத்தியசாலையின் ஓய்வு நிலை மருந்தியல் நிபுணர் டாக்டர் இ. கணேசமூர்த்தியின் சாயியுடனான அனுபவ பகிர்வு இடம்பெறும். (இ-3)

# 'மகிழ்ச்சிகரமான வகுப்பறை' செயலமர்வு



கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் மகிழ்ச்சிகரமான வகுப்பறை என்னும் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. ஆசிரிய மாணவர்களின் தொழில்வாண்மைக்கு ஏற்ப உளவியல் ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கலாசாலையின் முதல்வர் தலைமை தாங்க யாழ். இந்துக் கல்லூரி உள்வளத்துணையாளர் மகிழ்ச்சிகரன், கிளிநொச்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டனர். இச் செயலமர்வினைக் கல்விக்கழகத்துக்குப் பொறுப்பான விரிவுரையாளர் பிரசாந்தன் ஒழுங்கு செய்திருந்தார். (இ-23)

# மாணவனின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியரை இடமாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

மாணவி ஒருவரின் பணத்தை திருடிய சந்தேகத்தில், ஆசிரியை ஒருவர், மாணவர்கள் அறுவரின் கையில் கர்ப்பூரத்தை கொளுத்திய சம்பவமொன்று, பொகவந்தலாவைக்கு உட்பட்ட பாடசாலையில் இடம்பெற்றுள்ளது. இதன்காரணமாக, மாணவரொருவரின் வலது கையில் எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி பாடசாலையில் தரம் 3 இல் கல்வி பயின்று வரும் மாணவர்களே இவ்விபரீத சம்பவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து, மாண வர்களின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியையை இடமாற்றக்கோரி, பொகவந்தலாவை ரொப்கில் தோட்ட மக்கள், நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஹற்றன் வலயக் கல்வி அதிகாரிகள் மற்றும் பொலிஸார் பாடசாலைக்கு சென்றனர். (இ-7)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2017-13.04.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## பணப்புழக்கம் நன்றாக இருக்கும்!



சட்ட திட்டங்களுக்கு மதிப்பளிக்கும் கும்ப இராசி அன்பர்களே!

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்தில் ஜென்ம இராசியில் கேதுவும், 7இல் ராகுவும் இருக்கிறார்கள். எனவே சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் இருக்கிறது. அதே நேரத்தில் உங்கள் இராசிநாதன் சனி, 10ஆம் இடத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். தனாதிபதியான குரு, புதன் வீட்டிலும் புதன், குரு வீட்டிலுமாக பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். குரு பகவான் உங்கள் இராசியைப் பொறுத்தவரை லாபாதிபதியாகவும் விளங்குபவர். அவரது பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும்.

புத-ஆதித்ய யோகமும், புத-சுக்ர யோகமும் இருப்பதால், ஸ்தம்பித்து நின்ற தொழில் தானாக நடைபெறும். நண்பர்களின் ஆதரவு கூடும். சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தால் ஆரோக்கிய தொல்லைகளும், பணி செய்யும் இடங்களில் மாற்றங்களும் ஏற்படுமோ? என்று நினைக்க வேண்டாம். குரு, வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். அதே நேரத்தில் சுக்ர பார்வை, குருவின் மீது பதிகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தேக நலன் சீராகி, ஆரோக்கியத்தை வழங்கும்.

மனக்குழப்பம் அகன்று திட்டங்களை துணிந்து செயலாற்ற முன்வருவீர்கள். கொடுத்த தொகை குறிப்பிட்டபடி வந்து சேரும். சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றிருப்பதால் ஏற்ற, இறக்கமில்லாத நிலை அமைய நாகசாந்தி பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் வியாழன்தோறும் தென்முக கடவுளுக்கு முல்லைப்பூ மாலை சூட்டி குரு கவசம் பாடி வழிபட்டு வருவதும் நல்லது.

முன்னேற்றத்திற்கு வித்திடும் இடமான 3ஆம் இடத்தில் செவ்வாய் இருப்பதால் அதற்குரிய தெய்வமாக விளங்கும் முருகப் பெருமானை பங்குனி உத்திர நாளில் விரதமிருந்து வழிபட்டு வருவது நல்லது.

பொன்னான .புதன் பெயர்ச்சி

மார்ச் 30ஆம் திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பிறகு ஏப்ரல் 7ஆம் திகதி மீனத்திற்கே புதன் வக்ரமாக செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சமா அஷ்டமாதிபதியான புதன் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது மாமன், மைத்துநர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர். புதியவர்களை நம்பி செய்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இல்லம் கட்டி குடியேறுவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். விலகி இருந்த சகோதரர்கள் தானாக வந்து இணைவர். பணியாட்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். வழக்குகளில் வாபஸ் பெற்றுக் கொள்ளும் எண்ணம் மேலோங்கும்.

சனியின் வக்ர இயக்கம்

ஏப்ரல் 9ஆம் திகதி விருச்சிக இராசியில் சனி




வக்ரம் பெறுகிறார். இராசிநாதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல் நலக் குறைவால் உற்சாகம் குறையலாம். உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்காமல் போகலாம். கடன் சுமை கூடும். காரியங்களை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும். ஆர்வம் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது. பயணங்களை திடீர் திடீரென மாற்றியமைத்துக் கொள்வீர்கள்.

ரிஷப செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 11ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதன் விளைவாக புதிய பாதை உங்களுக்குப் புலப்படும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து நல்ல பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். வாங்கிப் போட்ட இடத்தில் வீடு கட்ட முடியவில்லை என்று கவலைப்பட்டவர்கள், இப்போது கட்டடப் பணியை தொடருவார்கள். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது ஒரு பொற்காலம். செவ்வாய்க்கிழமை தோறும் கந்தசஷ்டி கவச பாராயணம் செய்து பஞ்சமுக விளக்கேற்றி, இல்லத்தில் முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால், குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக தீரும். வீடு, வாகனங்களை சீர் செய்து மகிழ்வீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள். உயர் கல்வியில் தேர்ச்சி பெற்று பிள்ளைகள் பெருமை சேர்ப்பர். தாய் வழியிலும், உடன் பிறப்புகளின் வழியிலும் ஒத்துழைப்பு கிடைக்கும். மேற்படிப்பிற்காக முயற்சித்தவர்களுக்கு அனுகூலம் உண்டு. அரசு வேலைக்காக விண்ணப்பித்திருந்தவர்களுக்கு அது கைகூடும். சனியின் வக்ர காலத்தில் சந்தோசம் கிடைக்க ஆஞ்சநேயரை வழிபடுங்கள். செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கையை வழிபடுவதன் மூலம் துயரங்கள் விலகும்.

## சிரமங்களிலிருந்து விடுபடுவீர்கள்!



மனச்சாட்சிப்படி நடக்க நினைக்கும் மீன இராசி அன்பர்களே!

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருவும் சப்தமாதிபதியான புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்று விளங்குகிறார்கள். உங்கள் இராசியிலேயே சுக்ரனும், சூரியனும் சஞ்சரிக்கிறார்கள். எனவே தொட்டது துலங்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தீட்டிய திட்டங்கள் நிறைவேறும்.

எத்தனை கிரகங்கள் பார்த்தாலும் குருவின் பார்வைக்கு மட்டுமே அதிக பலன் உண்டு. அப்படிப்பட்ட குரு, உங்கள் இராசிக்கு அதிபதியாகி தன் வீட்டையே பார்ப்பதால் இதுவரை இருந்த தடைகள் விலகும். இல்லத்தில் மங்கள நிகழ்ச்சிகள் நடைபெற வழி பிறக்கும்.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். படிப்படியாக நல்ல முன்னேற்றம் காணப்போகிறீர்கள். பகல்-இரவு பாடுபட்டதற்கு ஏற்ப பலன் கிடைக்கும். புத-சுக்ர யோகமும், புத-ஆதித்ய யோகமும் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கலைத் துறையினருக்கு அனுகூலம் உண்டாகும். குரு-சந்திர யோகத்தோடு மாதம் பிறப்பதால் அருளாளர்களின் ஒத்துழைப்பால் சிக்கல்களில் இருந்தும், சிரமங்களில் இருந்தும் விடுபடுவீர்கள்.

6இல் ராகு இருந்து குரு கேந்திரத்தில் இருப்பதால் அஷ்டலட்சுமி யோகம் ஏற்படும் என்பார்கள். அந்த அடிப்படையில் இந்த மாத கிரக நிலைகள் அமைவதால், அஷ்டலட்சுமி யோகம் செயற்படப்போகிறது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரலாம். கடல் தாண்டும் வாய்ப்புகள் கூட கைகூடும். சான்றோர்களின் ஆதரவோடு தடைகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். வாழ்வில் வசந்தகாலமாக இம்மாதம் அமையப் போகிறது. பங்குனி உத்திர நாளில் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் பலன்களை அதிகம் வரவழைத்துக்கொள்ள இயலும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு 4,7ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாத தொடக்கத்தில் நீச்சம் பெறுகிறார். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறும் பொழுது, யோகத்தைக் கொடுக்கும். எனவே சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். விரோதிகள் விலகுவர். விரக்தி நிலை மாறும். பணத் தேவை பூர்த்தியாகும். பூர்வீக சொத்து பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும். மேட- புதனின் சஞ்சாரத்தால் கல்யாண வரய்ப்புகள் கைகூடும்.

சனியின் வக்ர இயக்கம்

ஏப்ரல் 9ஆம் திகதி விருச்சிக இராசியில்




சனி வக்ரம் பெறுகிறார். 11,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறும் பொழுது வரவும், செலவும் சமமாக இருக்கும். லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் சனி விளங்குவதால் லாபமும், விரயமும் சேர்ந்தே வரும். எனவே சேமிக்க இயலாது. தோட்டம், துரவுகளை வாங்கி அதை மேம்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளலாம். வெளிநாட்டு முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் விரும்பும் விதத்தில் அமையும். இளைய சகோதரரோடு இணக்கம் ஏற்படும். அலுவலக பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

ஏப்ரல் 11ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது, முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்போடு ஒப்பற்ற நல்ல காரியம் ஒன்றை செய்ய முற்படுவீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். குருவின் பார்வையும் செவ்வாய் மீது பதிவதால், குரு மங்கள யோகமும் உருவாகும். எனவே குடும்பத்தில் மங்கள ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும். புத்திர பேறுக்காக காத்திருக்கும் தம்பதியர்களுக்கு மழலையின் ஓசைகூட கேட்கும்.

செவ்வாய்தோறும் வராகி அம்மனை வழிபட்டு வருவதன் மூலம் வளர்ச்சி கூடும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறவிருக்கும் மாதம் இது. குரு பார்வையால் குடும்பத்தில் அமைதி கூடும். கொள்கை பிடிப்போடு செயற்படுவீர்கள். எந்த காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். உற்றார் ,உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்காலம் குறித்து எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி கிடைக்கும். புத-ஆதித்ய யோகத்தால் உத்தியோகத்தில் உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. வியாழன் தோறும் குருவை வழிபடுங்கள். பங்குனி உத்திரத்தன்று செந்தில் வடிவேலனை வழிபடுங்கள்.

(முற்றும்)




# விருந்தோம்பல்

""அன்புள்ள ஆண் புறாவே, நீ என் குளிரை போக்க உதவி செய்தாய். இப்போது எனக்கு கடுமையாக பசிக்கிறது. என் பசியை போக்க ஏதாவது செய்," என்றான்.

""வேடரே, நாங்கள் ஏழை புறாக்கள். கவலை இல்லாமல் வாழ்பவர்கள், அன்றாடம் கிடைக்கும் உணவை சாப்பிட்டு நிம்மதியாக தூங்கி விடுவோம். மறு நாளைக்கு சேர்த்து வைப்பது இல்லை. எங்கள் காடுகளில் ஒன்றும் இல்லை. ஆனாலும், விருந்தினரான உம்மை பசியால் வாட விடுவது சரியானது அல்ல. எனவே, உமக்கு உணவு தர நான் தயாராகிவிட்டேன்," என்று கூறியது.

பின்னர் எரியும் தீயை அதிகமாக்கியது. தீ மள மளவென எரிந்தது. நெருப்பை வலம் வந்து அதில் குதித்தது. ""வேடரே, எனக்கு வேறு வழி தெரியவில்லை. எனவே, என்னையே உமக்கு உணவாகத் தருகிறேன்," என்று கூறியது. தீயில் அதன் உடல் கருகி வெந்து அதன் உயிர் பிரிந்தது. வேடன் இதைக் கண்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தான். புறாவின் விருந்தோம்பல் அவனை திகைப்படைய வைத்தது.

""நான் பெரும் பாவி. புத்தியற்றவன். இவ்வளவு அருமையான அன்புள்ள புறாக்களை நான் வேட்டையாடி குவித்துள்ளேன். இனி இந்த பாவத் தொழிலை



செய்யமாட்டேன்," என்று எண்ணி வருந்தினான். தன் கையில் வேட்டையாட வைத்திருந்த பொருட்களை தூக்கி வீசி எறிந்தான். பெண் புறாவையும் விடுதலை செய்தான்.

பெண் புறா விடுதலை அடைந்ததும் தன் கணவனின் தியாகத்தை எண்ணி மகிழ்ந்தது. தானும் தீயில் விழுந்து இறந்தது. தவறை எண்ணி மனம் வருந்திய வேடன் அன்று முதல் வேட்டையாடும் தொழிலை விட்டான்.

அடைக்கலம் புகுந்தவன் எவ்வளவு கொடியவனாக இருந்தாலும் அவனை உயிரைக் கொடுத்தாவது காத்த புறாக்களின் அன்பு எத்தனை மேலானது பார்த்தீர்களா?

முற்றும்.




- 1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1556 - கண்டர்பரி பேராயர் தொமஸ் கிரான்மர் ஒக்ஸ்போர்ட் நகரில் எரியூட்டிக் கொல்லப்பட்டார்.
- 1788 - லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரில் நிகழ்ந்த பெரும் தீயினால் 25 விழுக்காடு நகர மக்கள் கொல்லப்பட்டனர்.
- 1800 - ரோம் நகரில் இடம்பெற்ற கலகங்களை அடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் நகரை விட்டு அகற்றப்பட்டதை அடுத்து, வெனிஸ் நகரில் ஏழாம் பயஸ் பாப்பரசராகப் பதவியேற்றார்.
- 1801 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையில் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் போர் இடம்பெற்றது.
- 1844 - பஹாய் நாள்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் படி இந்நாள் முதலாம் ஆண்டு முதலாம் நாள் ஆகும்.
- 1857 - டோக்கியோவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 100,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1905 - ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது புகழ் பெற்ற சிறப்புச் சார்புக் கோட்பாடு கொள்கையை வெளியிட்டார்.
- 1913 - ஒகையோவில் டேட்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளம் காரணமாக 360 பேர் கொல்லப்பட்டு 20,000 வீடுகள் அழிந்தன.
- 1917 - டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1933 - டேச்சு வதை முகாம், நாசிகளின் முதலாவது வதை முகாம், ஜெர்மனியில் அமைக்கப்பட்டது.
- 1935 - பேர்சியா நாட்டை ஈரான் (ஆரியரின் நாடு) என அழைக்கும்படி ரெசாஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் மண்டலாய் நகரை பிரித்தானியப் படைகள் விடுவித்தனர்.
- 1948 - முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.
- 1960 - நிறவெறி: தென்னாபிரிக்காவில் ஷார்ப்வில் என்ற இடத்தில் கறுப்பின தென்னாபிரிக்க ஆர்ப்பாட்டக்காரரை நோக்கி காவற்படையினர் சுட்டதில் 69 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ மேயர் ஜோசப் அலியோட்டோ விடுத்தார்.
- 1980 - ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்பை எதிர்த்து மொஸ்கோவில் 1980 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிப்பதாக ஐக்கிய அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
- 1984 - மணலாறு பிரதேசத்தைத் தடைவலயமாக்கி இலங்கை அரசு அங்கிருந்த தமிழர்களை அடித்து விரட்டினர்.
- 1990 - 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.
- 1994 - ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய Schindler's List ஏழு ஆஸ்கார் விருதுகளை வென்றது.
- 1998 - புனித வெள்ளி உடன்பாடு வடக்கு அயர்லாந்தில் எட்டப்பட்டது.

பிறப்புக்கள்

- 1768 - ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சுக் கணிதவியலாளர் (இ. 1830)
- 1807 - சைமன் காசிச்செட்டி, 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் தமிழ் புளூட்டாக் நூலை எழுதிய ஈழத்தவர்.
- 1867 - பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (இ. 1911)
- 1916 - பிஸ்மில்லா கான் உலகப் புகழ்பெற்ற ஷெனாய் இசை மேதை (இ. 2006)
- 1922 - முஜிபுர் ரகுமான், வங்காள தேசப் பிரதமர (இ. 1975)
- 1923 - பொள்ளாச்சி நா. மகாலிங்கம், தமிழகத் தொழிலதிபர், மக்கள் சேவையாளர் (இ. 2014)
- 1932 - வால்டர் கில்பேர்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்.
- 1936 - காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (இ. 2004)

இறப்புக்கள்

- 2008 - க. சச்சிதானந்தன், ஈழத்துத் தமிழறிஞர், (பி. 1921)

- சிறப்பு நாள்ஜதொகுஸ
- உலக கவிதை நாள்
- உலக வன நாள்
- நமீபியா - விடுதலை நாள் (1990)
- தென்னாபிரிக்கா - மனித உரிமைகள் நாள்
- உலக செய்யுள் நாள் - யுனெஸ்கோ




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 90 | 120 | 100 |
| தக்காளி | 120 | 100 | 40 | 120 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 80 | 50 |
| கோவா | 30 | 60 | 20 | 40 | 40 |
| கரட் | 80 | 60 | 80 | 100 | 40 |
| பூசணி | 50 | 60 | 30 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 75 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 250 | 150 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | - | 100 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 | 200 | 100 |
| லீகஸ | 50 | 100 | 60 | 80 | 50 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 160 | 100 | 80 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 600 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 50 | 200 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 10 | 30 | 20 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 70 | 50 | 80 | 80 |
| தேங்காய (ஒன்று) | 70 | 70 | 20-70 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 40 | 160 | 50 |
| முள்ளங்கி | 60 | 60 | 25 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 80 | 60 |

> ஒரு கோடியில் நின்று கொண்டு காட்டும் பிடிவாதம் ஒருபோதும் நிலைக்காது. நடுநிலையிலிருந்து கடைப்பிடிக்கும் நிதானமே உறுதியாய் நிற்கும்.
>
> – ஓர் அறிஞர்

**வலம்புரி**

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## விதுரன் வில் முறிப்பதை விட தருமர் பக்கம் வருவதே நல்லது

வில்லுக்கு விஜயன் என்பதெல்லாம் பின்னாளில் ஏற்பட்டது. உண்மையில் வில்லுக்கு விதுரன் என்றே கூறப்பட்டு வந்தது.

கௌரவர் தலைவன் துரியோதனனின் வசைச் சொல் தாங்க முடியாமல் விதுரன் தன் வில்லை சபை நடுவே முறித்தெறிகிறான்.

இனிமேல் யான் போர்க்களத்தில் வில்லெடேன் என்ற சபதத்துடன் விதுரன் தன் வில்லை முறித்ததனால் வில்லுக்கு விதுரன் என்ற பெயர் அருகிற்று.

பரவாயில்லை கௌரவர் சேனைகளின் அதர்மம் கண்டே விதுரன் வில் முறித்தான். இதனால் குருஷேத்திரப் போரில் துரியோதனனின் பக்கம் விதுரன் நின்று விற்போர் செய்யவில்லை.

இஃது கௌரவர் சேனைகளின் தோல்விக்குக் காரணம் என்று கூடக் கூறலாம்.

ஆனால் விதுரன் வில்லை முறிக்காமல் துரியோதனா! நீ செய்வது அதர்மம், அநீதி ஆகையால் நான் பாண்டவர்கள் பக்கம் செல்கிறேன் என்று கூறியிருந்தால்,

விதுரன் பாண்டவர் பக்கம் நின்றால் போர் வெற்றி தருமர் பக்கத்துக்குக் கிடைத்துவிடும் என்ற பயத்தில் துரியோதனன் போருக்குச் சம்மதம் தெரிவிக்காமல் கூட விட்டிருக்கலாம்.

இவ்வாறானதொரு முடிவு பாண்டவர்களுக்கு உரிய உரிமையைக் கொடுப்பதுடன், போர் அழிவுகளையும் தவிர்த்திருக்கும் என்று எண்ணுவதில் தவறில்லை.

இதனால்தான் விதுரன் வில்லை முறிப்பதை விடுத்து தன் வில்லுடன் பாண்டவர் பக்கம் வந்திருக்க வேண்டும்.

அதைச் செய்யத் தவறியது விதுரன் விட்ட தவறு என்பதே நம் வாதம். அறத்தையும் நீதியையும் உணர்ந்த நேர்மையாளனாகிய விதுரன் தன் வில்லை முறித்து எறிந்து விட்டு,

நடுவுநிலை என்று கூறிக்கொண்டு இருப்பதென்பது எந்தவகையிலும் ஏற்புடையதன்று.

நடுவுநிலை என்பது பக்கம் சாராமை என்று எவரும் நினைத்து விடக் கூடாது. பக்கம் சாராமை வேறு நடுவுநிலை வேறு.

அறத்தின் பக்கம் நீதியின் பக்கம் நிற்பதே நடுவுநிலையாகும். அறத்தின் பக்கமும் இல்லை; மறத்தின் பக்கமும் இல்லை என்பது ஒருபோதும் நடுவுநிலையாகாது என்பதைப் புரிதல் அவசியம்.

இந்த வகையில் விதுர நீதி போன்று நம் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களும் செயற்பட்டுள்ளார்.

அதாவது ஐ.நா சபையின் தீர்மானங்களை அமுலாக்குவதில் கால அவகாசம் கொடுப்பதென்பது ஏற்புடையதன்று என வடக்கு மாகாண முதலமைச்சர் கூறியுள்ளார். அவர் கூறியது நீதியானது; பாதிக்கப்பட்ட மக்கள் சார்பானது; உண்மையானது.

கால அவகாசத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை சம்மதம் தெரிவித்துள்ள இந்த வேளையில்,

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் கால அவகாசம் வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்குவது நீதியாகாது என்ற தன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இந்தக் கருத்தை தமிழ் மக்கள் வரவேற்கின்ற அதேவேளை, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் முதலமைச்சர் கூறுகின்ற இக்கருத்தை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்பதும் நம் தாழ்மையான கோரிக்கை.

இதேவேளை கால அவகாசம் வழங்குவது ஏற்புடையதல்ல என்று கூறுவதோடு மட்டும் தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதாமல்,

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கும் கூட்டமைப்பின் தலைமைக்குத் தக்க பாடம் புகட்டுவதும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தார்மீகக் கடமையாக இருக்கும் என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

# ராணுவத்தை தண்டிக்க முயற்சிப்பது தார்மீகத் தன்மைக்கு முரணானதாம்

## தயான் ஜயதிலக கூறுகிறார்

நாட்டில் ஆயுத குழுவை தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்திக் கொடுத்த பின்னர் சர்வதேச அல்லது தேசிய நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிமன்றங்களை அமைத்து இராணுவத்தை தண்டிக்க முயற்சிப்பது தார்மீக தன்மைக்கு முரணானது. உள்நாட்டு போர்களை வெற்றிகொண்ட நாடுகள் எல்லாம் விசேட நீதிமன்றத்தை நிராகரித்து வரும் நிலையில் நாமாக கழுத்தை நீட்டுகின்றோம் என கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

சர்வதேச பிரேரணையை நிராகரிக்கும் இறுதி தருணத்திலும் அரசாங்கம் உறுதியான தீர்மானம்ஒன்றை எடுக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பிலான பிரேரணையை இலங்கை கையாளும் விதம் சாதகமானதா என சிவில் அமைப்புக்களுடனான சந்திப்பு ஒன்றில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் கீழ் உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மன்னார் பிராந்தியத்தின் பொலிஸ் அத்தியட்சகராக பணியாற்றிய எச்.என்.எஸ்.பீரிஸ் கண்டிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றிய தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் 2017 ஆம் ஆண்டிற்கான கல்விக் கண்காட்சி பாடசாலை அதிபர் தி. ரவீந்திரநாதன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத் தரணியுமான கேசவன் சயந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். வலய அழகியற் கலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. க. ஜெயபாலசிங்கம், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலன் (ஜே.பி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கண்காட்சியை இலவசமாக பார்வையிட முடியுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.(இ-3-136)

## பொதுக் கூட்டமும் கௌரவிப்பு நிகழ்வும்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 9 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மண்டபத்தில் வீ. எஸ். வீரசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக பிரதேச செயலர் எஸ் சிவஸ்ரீ. செயலகக் கணக்காளர். எஸ். சிவரஞ்சன், பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் கே. கமலநாதன், யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் கே. கதிரமலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**தீபத்தை தொட்டு வணங்கும் மந்திரம் எது?**

மங்களம் பவது கல்யாணம் ஆயூராரோக்யவர்த்தனம்

மமதுஃகவிநாசனம் ஸந்தியாதீபாயதே நம

**குத்துவிளக்கேற்றும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?**

வீடுகளில் அலங்காரத்துடன் கூடியதும் மூன்று அடுக்குகளைக் கொண்டதுமான குத்துவிளக்குகளைப் பயன்படுத்தக் கூடாது.




இரண்டு அடுக்குகளைக் கொண்ட பித்தளையில் தயாரிக்கப்பட்ட குத்து விளக்குகளையே வீடுகளில் பயன்படுத்த வேண்டும். விளக்கு எரியும் போது எண்ணெய் வழியும் விளக்கைப் பயன்படுத்தவே கூடாது. கரி பிடித்ததும் உடைந்ததுமான விளக்கையும் உபயோகிக்கக்கூடாது. சுமாரான உயரத்தில் உள்ள பீடத்திலோ அல்லது பலகையிலோ வைத்து விளக்கேற்ற வேண்டும்.

(தொடரும்)

## பட்டப்படிப்பிற்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படுகின்ற வியாபார முகாமைத்துவமாணி பட்டப் படிப்பிற்கான தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் முதலாம் (சனிக்கிழமை), இரண்டாம் (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மேற்படி நிலையத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதம் கிடைக்கப் பெறாதோர் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 2.30 மணி வரை திறந்த மற்றும் தொலைக் கல்விநிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமல தாசன் அறிவித்துள்ளார். (இ)

## அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாண பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால். நடத்தப்படுகின்ற வணிக மாணி (அரையாண்டு) 2013/ 2014 கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டு பதியப்பட்டவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முகாமைத்துவத்துவக் கற்கைகள் வணிக பீடத்தலுள்ள, முகாமைத்துவ மண்டபம் -II இல் காலை 9மணி தொடக்கம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்டவர்களுக்கான அழைப்பிதழ் கடிதங்கள், தபாலில் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும், தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமல தாசன் அறிவித்துள்ளார்.(இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ வழிபடுவதற்குரிய (பூஜைக்குரிய) ஒரே கடவுள் மனித உடலிலுள்ள மனித ஆன்மாவே. எல்லா விலங்குகளும் கோயில்களே என்பது உண்மைதான். ஆனால் மனிதனோ அனைத்திலும் உயர்ந்த கோயில். கோயில்களுள் தாஜ்மஹால் என்பதே. என்னால் அதில் வழிபட முடியாவிட்டால் வேறு எந்தக் கோயிலும் எந்தப் பயனும் தராது.

❖ தினமும் நம் கண்முன்னே கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கும் முப்பது கோடி மக்களைக் கடைத்தேற்றும் பொருட்டு உங்கள் வாழ்நாள் முழுவதையும் ஈடுபடுத்தக் கங்கணம் கட்டிக் கொள்க.

❖ யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே நான் மகாத்மா என்பேன். அன்றேல் அவன் துராத்மாவே.

❖ இலட்சக்கணக்கான மக்கள் பசியாலும் அறியாமையாலும் உழலும் வரை அவர்களுடைய செலவில் கல்வி கற்றும் அவர்களை ஒரு சிறிதும் கவனிக்காத ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி என்பேன்.

# யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி

## வாதரவத்தை விக்னேஸ்வரா சம்பியன்



யாழ்.வலய பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்ட போட்டியில் யா/ வாதர வத்தை விக்னேஸ்வரா வித்தியால யம் சம்பியனானது.

அண்மையில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போட்டியில் வாதர வத்தை அணியினர் அரையிறுதி போட்டியில் கொழும்புத்துறை இந்து வித்தியாலயம் நிர்ணயித்த 60 என்ற வெற்றி இலக்கை 5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.

இறுதிப் போட்டியில் உரும் பிராய் சைவத்தமிழ் அணியின ருடன் எதிர் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத்தமிழ் அணியினர் 8 பந்து பரிமாற்றங்களில் 62 ஓட்டங்களை பெற்றனர். ஜீவிகா மற்றும் அஜிந்தா ஆகியோர் சிறப்பாக பந்து வீசினர். பதிலுக்கு வாதரவத்தை அணியினர் 5.5 பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக கஜனி 25 ஓட்டங்களையும் தினேசா 20 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு காரணமாக விளங்கினார்கள்..

2017 ஆம் ஆண்டின் 20 வய திற்குட்பட்ட பெண்களுக்கான துடுப் பாட்டத்தில் வாதரவத்தை விக் னேஸ்வரா வித்தியாலயம் யாழ். வலய சம்பியனாகியது.

இவ் அணியினர் கடந்த வாரம் இடம்பெற்ற எல்லே போட்டியில் 2 ஆம் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (க)

# காலிறுதிக்கு தகுதி பெற்றது ரேஞ்சஸ்



வல்வை விளையாட்டுக் கழ கம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் 19.03.2017 அன்று இடம்பெற்ற ஆட்டத்தில் ரேஞ்சஸ் வி.கழகத்தை எதிர்த்து இமை யாணன் மத்தி வி.க. மோதியது.

4 புறமும் இரசிகர்களின் கரகோசத்தின் மத்தியில் ஆரம்ப மாகியது ஆட்டம் ஆரம்பமாகிய 4 ஆவது நிமிடத்தில் வர்மனின் "மின்னல் வேக கோலினால்" முதல்பாதியில் முன்னிலை வகித்தது ரேஞ்சஸ். இரண்டாம் பாதி ஆரம்பம். இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளும் தமது உச்ச திறமையை வெளிப் படுத்தி ஆட்டத்தை தொடர்ந்தது. 33 ஆவது நிமிடத்தில் இமை யாணன் மத்தி வி.க முதலாவது கோலை பெற்றது.

ஆட்டம் உருண்டோடியது. இரு அணிகளின் பக்கமும் வெற்றிக்காற்று வீசியது. ஆட்டம் முடிவடைய 3 நிமிடங்கள் இருக் கையில் மாதுஜனின் அபாரமான ஆட்டத்தினால் 2 ஆவது கோல். கோல் அடிக்கப்பட்டதும் மைதா னத்தில் இருந்த ரேஞ்சஸின் இரசிகர்கள் அல்லோகலப்பட்ட னர். ஆட்டத்தின் இறுதி நிமிடங் கள் உருண்டோடின. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ரேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் காலிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நவஜீவன்ஸ் வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



நவஜீவன்ஸ் கழக வீரர்களுக் கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 18.03.2017 அன்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் RED EYES அணியை எதிர்த்து BLACK BLOOD அணி மோதியது. இடம்பெற்ற போட்டியில் ஆரம்பத்தில் கிடைக்கப்பட்ட கோல் சந்தர்ப்பத்தை முகுந்தன் கோலாக்க,ஆட்டம் வேகமடைந்தது.

அதே வேகத்தில் விஜி (ஜயன்) மேலும் ஒரு கோலை போட இடை வேளைக்கு முன்பு 2 கோலை போட்டு RED EYES முன்னிலை பெற்றது.

அதனைத் தொடர்ந்து RED EYES ஆட்ட வேகத்தை மாற்றியது கௌதமன் பல வழிகளிலும் முயற்சித்தும் கோல் கைகூடவில்லை, அனால் பொபி சிறப்பாக பந்தை கையாண்டு விளையாட அவரா லும் 1 கோல் போட 3:0 என ஆட்டம் நிறைவிக்கு வந்தது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக மு.முகுந்தன் தெரிவானார். (க)

# இளையோருக்கான கிண்ணம் வென்றது தெல்லிப்பழை கலையொளி வி. கழகம்





இளையோருக்கான கிரிக்கெட் போட்டியில் 19.03.2017 அன்று கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழ கமும் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக்கழகமும் மோதி யது.



முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி அணி 6 ஓவர்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து இலக்கை துரத்திய பாரதி கழக அணி 6 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 21 ஓட் டங்களை மட்டுமே பெற்று, 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக கலையொளி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் 11 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 3 இலக்குகளையும் கைப்பற்றிய தயுஸ்ரன் தெரிவானார். (க)

# உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பெண்களுக்கான கரம் போட்டி

## ஸ்ரீமுருகன் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பெண்களுக்கான கரம் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் சிவன் வி.கழகத்தை எதிர்த்து மோதிய மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 0:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி வாகை சூடியது. (க)





புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரணைப் பாலை RCMV பாடசாலை யின் 18 வய்துப் பெண்கள் பிரிவு அணியினர் 3 ஆம் இடத்தைப்பெற்றுள்ளனர். (க)

# காணாமல்...

வவுனியாவில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று திங்கட்கிழமை 25, ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும்

"அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்"

"பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்" ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்று வருகிறது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைவாக கொழும்பில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை நிறுத்துவதாகவும், அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு கண்டனப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தி தபாலட்டைகளை அனுப்பி வைக்கும் முகமாக பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தபாலட்டைகளை தினமும் 1000, தபாலட்டைகளை அனுப்பும் போராட்டத்தையும் சமகாலத்தில் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கு பெணகள் வலையமைப்பு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், புதிய மாக்சிச லெனின் கட்சி, யாழ. பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள், புகையிரத கடவை காப்பாளர் சங்கம், இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றி பொது மக்கள் எனப் பலரும் இணைந்து தமது ஆதரவுகளை வழங்கி இப் போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றனர். (செ-15)

# தமிழக மீனவர்...

களை நிறுத்திவிடப்போவதில்லை என்று மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானதாக அண்மையில் இந்திய ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது. எனினும் இலங்கை கடற்படை இதனை உடனடியாக நிராகரித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் கொழும்பிலுள்ள மீன்பிடித்துறை அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, இந்த சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இலங்கை கடற்படை துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து இந்திய மத்திய அரசுக்கு விளங்கப்படுத்தயிருப்பதாகவும் கூறினார்.

இந்தியாவுடன் நாங்கள் மிகவும் நெருக்கமாக செயலாற்றிவருகின்றோம். அண்மையில் மோதல் தொடர்பான சம்பவமொன்று பதிவாகியது. இந்த நிலைமை தற்போது அமைதியடைந்திருக்கிறது. நாங்கள் இந்தியாவுடன் நட்புறவுடன் இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்திய மீனவர் பிரச்சினை 30 வருடமாக நிலவும் பிரச்சினையாகும். அண்மையில் இந்திய மீனவர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக இலங்கை கடற்படை மீது குற்றம்சாட்டப்பட்டது. இதுதொடர்பாக நாங்கள் இரண்டு விசாரணைகளை நடத்தினோம். முதலாவது விசாரணையின் இடைக்கால அறிக்கையில் உள்ளபடி எமது கடற்படையினரால் இழைக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்படவில்லை. அதேபோல இரண்டாவது முழுமையான விசாரணையின் அறிக்கை அடுத்த வாரமளவில் கிடைக்கப்பெறும் என நம்புகிறோம். இந்திய மத்திய அரசிடம் நாங்கள் இவற்றை விளங்கப்படுத்தியிருக்கின்றோம். அவர்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். எமது கடற்படையினர மிகவும் ஒழுக்கத்துடனும், பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளை மீறி எந்த வகையிலும் செயற்பட மாட்டார்கள். அவசியமற்ற நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டார்கள். மேலும் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தமாட்டார்கள் என்று நாங்கள் ஸ்திரமாக நினைக்கின்றோம். எனினும் இரண்டாவது அறிக்கையின் பின்னர் இதனை தெளிவுபடுத்துவோம். அதேபோல இந்திய மீனவர்கள் இவ்வாறான பிரச்சினைக்கு முகங்கொடுத்தார்கள் என்ற போதிலும், எல்லை தாண்டுகிறவர்களை கைது செய்வதை நிறுத்திவிடமாட்டோம். நான் இந்த அமைச்சை பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்கவில்லை. அந்த அனைத்துப் படகுகளும் எமது வசமே உள்ளன. மீனவர்களை மட்டுமே விடுவித்தோம். எனவே இந்த நடவடிக்கை காரணமாக இந்திய மீனவர்களின் வருகை 50 வீதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்திய மீன்பிடி அமைச்சருடனும் இரண்டு முறை பேச்சு நடத்தியுள்ளோம். அடுத்தமாதம் இந்தியக் குழுவொன்று இலங்கைக்கு வருகைதரவிருக்கிறது. அந்தப் பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுப்போம். இழுவைப் படகு முறைமை இரத்து செய்யப்பட வேண்டும் என்பதையும், அந்த முறைமை காரணமாக பாதிப்பு காணப்படுவதையும் இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது எமக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# பிள்ளையானின்...

துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட 4 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர சிவநேசதுரை சந்திரகாந்தன், கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோரும் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த நால்வரும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை வழக்கு விசாரணைகளின் போது நிராகரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வாகன விபத்து...

இதில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மனோன்மணி (வயது-55) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிட்டதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி விபத்தினை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் சாரதி மானிப்பாய் பொலிஸில் சரணடைந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

# இலங்கைக்கு...

யும் அமெரிக்கா 14ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. கடந்த வருடம் நான்காவது இடத்தை பிடித்திருந்த நோர்வே இந்த வருடம் முதலாவது இடத்தை பிடித்துள்ளது. முதலாவது இடத்தில் இருந்த டென்மார்க் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் முதலாம் இடத்தை நோர்வே பிடித்துக் கொண்டது. முறையே, ஐஸ்லாந்து, சுவிட்ஸர்லாந்து, பின்லாந்து, நெதர்லாந்து, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் சுவீடன் ஆகியன 3-10ஆம் இடங்களை பிடித்துக்கொண்டுள்ளன. (செ-11)

# வேலை கோரும் பட்டதாரிகளாக வடக்கில் 2 ஆயிரத்து 150 பேர் பதிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அரச வேலை கோரும் பட்டதாரிகளாக இதுவரை 2 ஆயிரத்து 150 பட்டதாரிகள் தமது பதிவினை வடமாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்துள்ளனர்.

வடமாகாணத்தில் உள்ள வேலை கோரும் பட்டதாரிகள் அரச வேலை கோரி நேற்றைய தினம் 22 ஆவது நாளாக தமது தொடர் போராட்டத்தினை யாழ்.மாவட்ட செயலக முன்றலில் முன்னெடுத்து வருகின்றனர். அண்மையில் வடமாகாண ஆளுநருடனான கலந்துரையாடலின் போது வடமாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகளின் விபரங்கள கோரப்பட்டிருந்தன. அந்த வகையில் கடந்த ஒருவார காலமாக 2012, 2013, 2014, 2015, 2016ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் ஏனைய பட்டதாரிகள் தமது பதிவினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் வடக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட கால அவகாசமும் வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்ட கால அவகாசமும் முடிவடைந்துள்ள நிலையில் இன்றைய தினம் வடமாகாண முதலமைச்சரை சந்திப்பதற்கு முடிவு செய்துள்ளதாகவும் வடமாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்க ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர். (செ-9)

# இராணுவத்திடம் ஒப்படைத்த எம் உறவுகள் எங்கே?

## முல்லையில் தொடரும் கவனயீர்ப்பு



(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று திங்கட்கிழமை 13ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது, கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30, மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியின் அருகாமையில் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சருடன் கனடா நாட்டு றொறன்ரோ நகர பிதா உட்பட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் வருகை தந்து இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-15)

# சர்வஜன வாக்கெடு...

போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன நல்லிணக்கத்தை பேணும் வகையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போது சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய வகையிலான திருத்தங்கள் உள்ளடக்கப்பட மாட்டாது என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஊடக சந்திப்புகளை நடத்தி கூறிவருகின்றனர்.

எனினும் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் கட்டாயம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பதை நான் அனைவருக்கும் உறுதிபட தெரிவிக்கின்றேன்.

உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் அது சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படும்.

சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் அரசியலமைப்புச் சட்டத்தினால் நாட்டுக்கு பயனில்லை.

இதனால், புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதும் நிச்சயமாக அது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்

நாம் யாருக்கும் பயப்படப் போவதில்லை எதற்கு பயப்பட வேண்டும். புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் நாட்டில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு கிடைக்கும் என எமக்கு நம்பிக்கை உள்ளது என லக்ஷ்மன் கிரியெல்ல தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# எச்.ஐ.வி 6 பேர் பலி

(கொழும்பு)

2017ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் HIV ஆல் 6 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவு பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இது வரையான காலப் பகுதியில் 55 பேர் HIV ஆல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 30 பேர் ஆண்கள். மேலும் இந்த காலப் பகுதியில் HIV யால் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும அவர கூறியுள்ளார்.

ஒப்பீட்டளவில் 2015ஆம் ஆண்டை விட 2016ஆம் ஆண்டு HIVயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். (செ-11)

## முக்கொலை வழ...

பகுதியில் வசித்து வந்த தனஞ்சயன் என்பவர் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி அவரது மாமியாரான நற்குணானந்தன் அருள்நாயகி, மைத்துனியான யசோதரன் மதுசா, மைத்துனனான நற்குணானந்தன் சுபாஸ்கரன் ஆகியோரை கொலை செய்ததாகவும் மனைவியான தனஞ்சயன் தர்மிகா மற்றும் மைத்துனியின் கணவரான தங்கவேல் யசோதரன் ஆகியோரை கொலை செய்ய எத்தனித்தார் என்ற 5 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் 3 கொலைகள், 2 கொலை முயற்சிகளை மேற்கொண்டதாக இவர் மேல் குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த 2016 ஆம் ஆண்டு யாழ் மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கை விரைவில் நடத்துமாறு அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் இவ் வழக்கு நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டத்தரணி நிஷாந் நாகரட்ணம் ஆஜராகியிருந்ததுடன் எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் திருக்குமரன் மற்றும் கே. ரஞ்ஜித்குமார் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

நேற்றைய தினம் மன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் எதிரிக்கு வாசித்துக்காட்டப்பட்ட போது 5 குற்றச்சாட்டுக்களுக்கும் எதிரி தான் சுத்தவாளி என மன்றுரை செய்து யூரல் சபை இல்லாத விசாரணையை தெரிவு செய்வதாக தெரிவித்தார்.

அந்த வகையில் குறித்த வழக்கை எதிர்வரும் 27,28,29,30 ஆகிய நாட்களில் தொடர் விசாரணை நடத்த நீதிபதி உத்தரவிட்டதுடன் மேற்குறித்த வழக்கில் உள்ள 14 சாட்சிகளில் தேவையான சாட்சிகளை ஆஜராகுமாறும் அழைப்பாணை விடுத்திருந்தார்.

01 தொடக்கம் 6 வரையான சாட்சிகளான யோகரட்ணம் துசாந்தன், கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம், பொ.கௌரிகாந்தன், தனஞ்சயன் தர்மிகா, தங்கவேல் யசோதரன், க.செல்வநாயகம் முத்து ஆகியோரை எதிர்வரும் 27 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும், 7 தொடக்கம் 9 வரையான சாட்சிகளான சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சொரூபன், உப பொலிஸ் பரிசோதகர் ஜெயவம்ச,பொலிஸ் சாஜன்ட் ராஜபக்ஷ ஆகியோரை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆஜராகுமாறும் ஏனைய சாட்சிகளை அடுத்துவரும் நாட்களில் ஆஜராகுமாறும் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

எதிரி தரப்பு சட்டத்தரணியால், குறித்த எதிரி தொடர்ச்சியாக விளக்கமறியலில் இருந்து வருவதால் பிணையில் விடுவிக்குமாறு மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

எனினும் தொடர் விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளதால் குறித்த பிணை மனுவை நிராகரித்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை எதிரியை விளக்கமறியில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார். (செ-9)

## இருவர் மீது...

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் அல்வாய் வடக்கு மகாத்மா வீதிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து கார்த்திகேசு சந்திரன் (வயது-40) என்பவர் வாள்வெட்டிற்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரவு 7 மணியளவில் இடம்பெற்ற மோதலில் வாள்வெட்டுக்கு இலக்காகி கு.கந்தசாமி (வயது-71) என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-60)

## பாதிக்கப்பட்டோ...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் மேலதிக கால அவகாசத்தை கோருவது ஏற்புடையதல்ல. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

இறுதி யுத்தத்தில் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டோரில் 287க்கு மேற்பட்டோர் இன்றுவரை எங்கு என்று தெரியவில்லை. இவை எல்லாவற்றுக்கும் பதில் கிடைக்காத நிலையில் கால அவகாசம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் வயோதிபத்திலும் போராடும் நிலையுள்ளது. வவுனியாவில், கிளிநொச்சியில், மன்னாரில், திருகோணமலையில் என எல்லா இடத்திலும் மக்கள் விரக்தியில் போராட ஆரம்பித்துள்ளனர்.

ஆனாலும் எமது மக்கள் பிரதிநிதிகள் எமது விருப்பத்தை கண்டறியாது இலங்கை அரசுக்கு ஆதரவாக உள்ளார்கள். நாங்கள் எதற்காக தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பியிருந்தோமோ அதனை செய்யாது தாங்களாகவே முடிவுகளை எடுத்து எங்களுக்கான நீதியை மறக்கடிப்பு செய்கின்றனர். இதுவா எங்கள் மக்கள் பிரதிநிதிகள் எமக்கு செய்யும் நல்லது? நாங்கள் எங்கள் பிள்ளைகளினை கோவில்களில் தொலைக்கவில்லை. இறுதிப்போர் நடைபெற்ற போது காப்பாற்றி வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தோம். அவர்களையே நாம் கோருகின்றோம்.

இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் மக்கள் பிரதிநிதிகள் தம்முடைய தவறுகளை இன்னும் கொஞ்ச காலத்தில் உணர்ந்து கொள்வார்கள். அல்லது மக்களால் அவர்கள் செய்த தவறுகளை உணரவைக்கப்படும். அந்த காலம் வெகு தொலைவில் இல்லை. இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகள் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். நாங்கள் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டு உள்ளோம். பல ஆயிரம் உறவுகள் கடத்தப்பட்டுள்ளோம். அவற்றுக்கான தீர்வுகள் எதுவும் இப்போது வரை கிடைக்கவில்லை.

பிரதானமாக அமெரிக்காவும் இந்தியாவும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். காலம் காலமாக இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதையே வாடிக்கையாக வைத்துக்கொள்ள முடியாது.

இவ்வாறு தொடர்ந்தும் செயற்பட்டால் சர்வதேசத்திடம் பாதிக்கப்பட்ட மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இழந்து விடுவார்கள். மீண்டும் தம்முடைய நீதிக்காக தாமே போராட ஆரம்பித்து விடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## கர்ப்பிணிப் பெண்...

தேசத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழு மாத கர்ப்பிணிப் பெண்ணொருவர் இனந்தெரியாத சிலரால் மிக கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்தையடுத்து குறித்த கொலையை மேற்கொண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்திருந்தனர். அத்துடன் இவர்களது வழக்கு விசாரணையானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் இடம் பெற்று வருகின்றது.

இவ்வாறன நிலையில் நேற்றைய தினம் இவ் வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போது குறித்த இரண்டு சந்தேக நபர்களும் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் அவர்களது அயல் வீட்டுக்காரரும் நீதிமன்ற அழைப்பின் பெயரில் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது ஊர்காவற்றுறை பொலிஸார் இவ் வழக்கு தொடர்பான விசாரணையை முன்னெடுத்து செல்வதற்கு குறித்த கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரதும் குறித்த மன்றில் முன்னிலையாகியிருந்த அயல் வீட்டுக்காரரதும் டி.என்.ஏ மாதிரி பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான கட்டளையை மன்று ஆற்ற வேண்டும் எனவும் மன்றை கோரியிருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த பெண்ணின் கணவர் மற்றும் மற்றைய நபரிடமும் மன்றானது டி.என்.ஏ மாதிரியை பெற்றுக்கொள்வதற்கான சம்மதத்தை மன்றானது பெற்றுக்கொண்டதையடுத்து குறித்த இருவரையும் இன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முன்னிலையாகுமாறு மன்றானது கட்டளையை பிறப்பித்தது.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி குறித்த இரு நபர்களிடமும் பெற்றுக்கொள்ளும் டி.என்.ஏ இரத்த மாதிரியை உடனடியாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமோ அல்லது அவரது பிரதிநிதியிடமோ கையளிக்க வேண்டும் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு மன்றானது பணிப்புரை பிறப்பித்திருந்தது.

அத்துடன் இவ் வழக்கு விசாரணையை நாளைய தினம் வரை ஒத்திவைக்கவும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை கடந்த வழக்கு தவணையின் போது குறித்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரின் இரத்த மாதிரியை இன்றைய தினம் பெற்றுக்கொள்ளுவதற்காக குறித்த சந்தேகநபரை யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்த சிறைச்சாலை அதிகாரிக்கு நீதவான் கட்டளை பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## தேர்தலில் போட்...

உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டது.

இதற்கு உச்சநீதிமன்றத்தில் பதில் அளித்துள்ள இந்திய தலைமை தேர்தல் ஆணையம் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிக்க பரிந்துரை செய்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைக்கு சென்றுள்ள சசிகலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுள்ளார்.

அவர் விடுதலை ஆன பின்னர் 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் தேர்தல் ஆணையத்தின் இந்த பரிந்துரை அமுலுக்கு வந்தால் சசிகலா வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.

இதனால் சசிகலாவின் அரசியல் வாழ்க்கை இத்தோடு தகர்ந்தது என கூறப்படுகிறது.

மேலும் அவர் அரசியல் கட்சியின் தலைமை பொறுப்பில் இருப்பதும் கேள்விக்கு உள்ளாக்கப்படும் எனவும் கருதப்படுகிறது. (செ-11)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

External Degree BA, Bcom
Jaffna University &Peradaniya University
GAQ, BA Part I, Ba Final
ஆரம்பம் :- 01 – 04 – 2017.

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits
ஆரம்பம் :- 25 – 03 - 2017

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accountancy courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes
ஆரம்பம் :- 25 – 03 - 2017

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium – Tamil & English

CERTIFICATE COURSE IN ENGLISH
14th Batches have successfully Completed the courses 15th batch commences on 1st April 2017.

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(சி-7859)



விற்பனைக்கு
கொங்கிறீற் கல்லு அரியும் புதிய மெசின் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0786155929
(கோண்டாவில்)
(8366)



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7838)



தேவை
எமது நிறுவனத்துக்கு சிற்றுண்டி மற்றும் மசாலா, பறாட்டா, தோசை தயாரிப்பாளர் தேவை.
(அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்)
லிங்கம் கிறீம் ஹவுஸ்
213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8362)



சுவையுலகின் "Super Star"
கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோறன்ட்
ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்
3-ம் ஆண்டின் இனிய நிறைவில்
31/03/2017 வரை
சிக்கன் பிறைட் ரைஸ் - 300/= ⇨ 210/=
சிக்கன் நூடில்ஸ் - 300/= ⇨ 210/=
மரக்கறி பிறைட் ரைஸ் - 140/= ⇨ 100/=
Special OFFER
பார்சல்கள் மட்டும்
(சி-7863)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நீங்கள் 8ம் வகுப்பு கல்வியினை பூர்த்தி செய்தவரா?
O/L அல்லது A/L Pass பண்ணியவரா? பல்கலைக்கல்வி பூர்த்தி செய்த பட்டதாரியா? வேலை பார்த்துக்கொண்டிருப்பவரா?
கனடாவில் சட்டரீதியாக குடிபெயர அனைவருக்கும் வாய்ப்புண்டு.
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் பூரணவிளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படும்.
கருத்தரங்கு
நாள்-26-03-2017
ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
IMMIGRATION APPROVED Canada
V2 Travels
முற்பதிவு அவசியம் - 0768226236
49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
(சி-7864)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.